விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 13 சனிக்கிழமை (27.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 98

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# மீள்குடியமரும் மக்களுக்கான நிதியுதவியை ஐ.நா. நிறுத்தியது

## போதிய நிதி இல்லையாம்

(கொழும்பு)

உள் நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்து பின்னர் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமரும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதுவராலயம் தெரிவித்துள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி தடுப்பு முகாமில் இருந்த இளைஞர்கள் வேறிடத்துக்கு மாற்றம்

### உறவினர்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

கைதடி பனை அபிவிருத்தித் திணைக் களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வன்னியைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் இளம் குடும்பஸ்தர்கள் படையினரால் அழைத்துச் செல்வதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாக முதல் கட்டமாக 70 பேரும் பின்னர் 30 பேரும் இவ்வாறு படையினரால் வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் எங்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள் என்ற தகவலைப் படையினர் தெரிவிக்கவில்லை என உறவினர்கள் கூறினர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலி ஆதரவுப் பெண் ஜேர்மனியில் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்ற சந்தேகத்தின் பேரில் ஜேர்மனியில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆதரவு வழங்கியதாகவும் நிதி உதவிகளை வழங்கியதாகவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (02 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமான ஓடு பாதையை பயன்படுத்த அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்ட இரணைமடு விமான ஓடுபாதையை விமான சேவைக்குப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

யுத்தத்துக்குப் பின்னரான வட பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த விமான ஓடு பாதையை உள்ளடக்கி விமான சேவைக் கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியில் விமான சேவைப் பயிற்சி நிலையம் ஒன்றுடன் ஆய்வு நிறுவனம் ஒன்றும் அடங்கும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஒருவர் தெரி (19 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் புதிய சிறைச்சாலை

(கொழும்பு)

கிளிநொச்சியில் புதிய சிறைச்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தச் சிறைச்சாலை மீண்டும் நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று தசாப்த காலமாக நீடித்த போர் காரணமாகக் குறித்த பிரதேசத்தில் அரசாங்க சட்ட (02 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலிருந்து திரும்பிய ஈழ இளைஞர்கள் கைது

(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சட்ட விரோதமான முறையில் கடலில் செல்ல முனைந்த இலங்கை அகதிகளைத் தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழகத்தில் பல்வேறு முகாம்களிலிருந்து புறப்பட்டுச் சென்ற 23 அகதிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். படகுகளின் ஊடாக குறித்த அகதிகள் தப்பிச் செல்ல முற்பட்டதாகத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு வழங்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய உள்ளிட்ட 18 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் தமது பாதுகாப்பு மோசமான அளவு பறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றிய காலத்தில் (19 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரி பிணையில் விடுதலை

(கொழும்பு)

அரசாங்கத்தைக் கவிழ்க்க சதித் திட்டம் தீட்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் சினமன் லேக் சைட் விடுதியிலிருந்து கடந்த ஜனவரி 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கேணல் கபில ரத்னாயக்க நேற்று முன்தினம் கோட்டை நீதிமன்ற நீதவானினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவரது வாக (20 ஆம் பக்கம் பார்க்க)

உங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதே எங்களின் நோக்காகும்
அதனால்தான் நாங்கள் உங்களோடு இருக்கிறோம்...






## கிளிநொச்சியில்...

திட்டங்களை அமுல் செய்வதில் சிக்கல் நிலைமை காணப்பட்டது. ஆனால் தற்போது அந் நிலைமை மாறியுள்ளது என அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள சிறைச்சாலை இலங்கையின் இருபதாவது விளக்கமறியல் சிறைச்சாலை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்களில் கிளிநொச்சி சிறைச் சாலையைத் தமிழீழ விடுதலைப்புலிகள் முகாமாகப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)




## கடையிலிருந்த பணியாளரை தாக்கிவிட்டு பணம் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

உண்டியல் மூலம் பணப்பரிமாற்றம் சேவை செய்யும் வர்த்தக நிலைய மொன்றிலிருந்து சுமார் 15 இலட்சம் ரூபாய் பணம் இனந் தெரியாதோரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது அங்கிருந்து பணியாளர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்.நவீனசந்தையிலுள்ள கடையொன்றில் இடம் பெற்றுள்ளது.

கடை உரிமையாளர் இல்லாத சமயம் பார்த்து அங்கு சென்ற இருவர் கடமையிலிருந்த பணியாளரை கதிரையால் தாக்கிவிட்டு அங்கிருந்த சுமார் 15 இலட்சம் ரூபாய் வரையில் அபகரித்துச் சென்றுள்ளனர். இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச-5)

## புலி ஆதரவுப்...

குறித்த சந்தேக நபர் ஜேர்மனிய நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 61 வயதான குறித்த சந்தேக நபர் 2002 ஆண்டுமுதல் புலிகளுக்காக நிதி திரட்டும் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ரீ.சீ.சீ. என்ற அமைப்பின் ஊடாக நிதி திரட்டப்பட்டு இலங்கையில் உள்ள விடுதலைப்புலிகள் அமைப்பினருக்கு அனுப்பிவைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## பட்டமளிப்புக்கு சென்றபோது விபத்து பேராசிரியர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்கு சென்ற வேளை ஆட்டோ பள்ளம் ஒன்றினுள் தடம் புரண்டதில் பேராசிரியர் திருமதி கலைவாணி இரமநாதன் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் கொக்குவில் ஆடியபாதம்வீதியில் இடம்பெற்ற சம்பவத்திலேயே அவர் காயமடைந்தார்.

இவர் தற்போது யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-30)

## ஆண்டுவிழா

(மட்டுவில்)

கெயர் சர்வதேச நிறுவனத்தின் லிவ்ற் திட்டம் 2 இன் முதலாவது சுழற்சிக்காலத்தில் கீடா நிறுவனத்தின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட தென் மட்டுவில் கிராம அபிவிருத்தி சங்கத்தினூடான சமூக முன்னெடுத்தல் குழுவின் ஓராண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை மாலை 2 மணிக்கு கதிரொளி சன சமூக நிலையம் தென்மட்டுவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் குழுத் தலைவர் திருமதி லூயில் மன்றேசா சிவாஜினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி நவரத்தினம் ரஞ்சனா கலந்து கொள்ளவுள்ளார். (எ-3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக் கழகத்தில் 27.03.2010 இன்றைய பட்டமளிப்பு விழாவின் போது பட்டம் பெறும்



திரு. கந்தையா பகீரதன்

B.Sc in Agr. (Hons) (2nd Class Upper Division)

மேலும் பல சிறப்புப் பட்டங்கள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி. த.க.பத்மநாதன் குடும்பம் (பெரியப்பா)

வாரிவளவு, காரைநகர்.

சுயேச்சைக்குழு-10



"தமிழர்களின் உரிமைகளைப் பெறமுடியாமற் போனமைக்குத் தகுதியற்றவர்கள் பாராளுமன்றக் கதிரைகளுக்கு பாரமானதும் ஓர் முக்கிய காரணமாகும்"

அன்பார்ந்த யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களே! உங்களின் சார்பிலே பாராளுமன்றம் செல்பவர்கள் புத்திஜீவிகளாகவும் ஆளுமை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம். எனவே உங்கள் பொன்னான வாக்குகளை அளித்திடுவீர் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளைக்கே

Dr.S.N. Thanihasalampillai
B.A, M.A, PhD.
SLEAS Class I, Dip. in Ed, Dip. in Ed Management.
Senior Consultant


சுயேட்சைக்குழு-10 X 5

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

-யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தினர்

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சிவபாதம்



(பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்க முன்னாள் காசாளரும் வடபிராந்திய கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க முன்னாள் செயலாளரும்)

மாதகல் மேற்கை பிறப்பிடமாகவும் தற்போது இவான் வீதி தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவபாதம் 25.03.2010 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான வைத்திலிங்கம் பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா தங்கமுத்து தம்பதியினரின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் முருகதாஸ் (நியூ.வி.எம்.கே.ஜுவலறி ஊழியர் சாவகச்சேரி), சங்கரதாஸ் (பிரான்ஸ்), கபில்தாஸ் (Phonix-கஜமுகன் ஹாட்வெயர்ஸ்), கேசவதாஸ் (யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் வர்த்தகப் பிரிவு 2011) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.03.2010 நாளை ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இவான் வீதி,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். T.P.: 0779000396

தகவல்:
சி.முருகதாஸ் (மகன்)
(நியூ வி.எம்.கே.ஜுவலறி ஊழியர், சாவகச்சேரி.)

(969)

வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் குடாநாட்டில் சகல பகுதிகளிலும் காப்புறுதி ஆலோசகராக யாழ். மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றி வரும் அரச காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.

வேலை பற்றி

- 1 மாத பயிற்சி காலத்தை உடையது.
- பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

அடிப்படைத் தகைமை

- G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடசித்தி
- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையை (BIO DATA) 05.04.2010 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல.942
மே/பா.வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(942)

# இன்று ஒரு தகவல்

## கடைசிக் கட்டம்

"தருமர் ஏன் காட்டுக்குப் போனார்?''

சூதாட்டத்தில் தோற்றுப் போனார். அதனால் அவர் காட்டுக்குப் போனார்.

தருமர் முதல் தடவை தோற்றுப் போய்,திரௌபதியும் அவமானப்பட்ட பிறகு திருதராஷ்டினன் என்ன பண்ணினான் தெரியுமா?

தருமர் இழந்த எல்லாப் பொருட்களையும் அவரிடமே திருப்பிக் கொடுத்தான்.

ஆனால் தருமர் மறுபடியும் சூதாடுகிறார். எல்லாவற்றையும் இழந்து விடுகிறார்.

அதன் விளைவு...

12 வருடங்கள் வனவாசத்துக்கும் 1 வருடம் அஞ்ஞாத வாசத்திற்கும் புறப்படத் தயாராகிறார்.

அந்தச் சமயத்தில் ஒரு நிகழ்ச்சி நடக்கிறது.

அந்த நிகழ்ச்சியை வியாசர் சொல்லவில்லையாம். வில்லிபுத்தூரர் மட்டும் சொல்லியிருக்கிறாராம். ஆன்மீகப் பேச்சாளர் ஒருத்தர் இதை எடுத்துச் சொன்னார்.

அது என்ன நிகழ்ச்சி தெரியுமா? இதுதான்.

"காட்டுக்குப் போவதற்கு முன்னர் நீங்கள் மறுபடியும் ஒரு தடவை சூதாட வேண்டும்'' என்று ஒரு குரல் கேட்டது.

"யார் அப்படிச் சொன்னது?'' என்று திரும்பிப் பார்த்தால் ... திரௌபதி நின்று கொண்டிருந்தாள்.

" எதற்காக அப்படிச் சொல்கிறாய்'' என்று கேட்கிறார் தருமர்.

"நாம் இப்பொழுது அடிமைத் தளையில் இருக்கிறோம். நீங்கள் ஜெயித்துவிட்டால் அது போய்விடும்'' என்றாள்.

"பணயம் வைப்பதற்கு ஒன்றுமில்லையே'' என்றார் தருமர்.

"ஒன்று இருக்கிறது''

"என்ன அது?''

"உங்களுடைய புண்ணியம்!''

"சரி, அப்படியே ஆடுகிறேன் என்று சொல்லிவிட்டு ஆடுகிறார். முதல் ஆட்டத்தில் தோற்றுப் போனார். இரண்டாவது ஆட்டம் இவர் ஆடவேண்டிய முறை. இவர் காய்களைக் கையில் எடுத்தார்.

அப்பொழுது திரௌபதி இவருடைய கையைப் பிடித்து, 'பகவானுடைய பன்னிரண்டு நாமங்களையும் சொல்லிவிட்டு ஆடுங்கள்' என்று சொல்கிறாள்.

அதேமாதிரி சொல்லிவிட்டு ஆடுகிறார். ஜெயித்து விடுகிறார். அடிமைத்தளை நீங்குகிறது.

"ஒரு முக்கியமான கருத்தை வலியுறுத்துவதற்குத்தான் வில்லிபுத்தூரார், வியாசர் சொல்லாத இந்தக் கதையை சொல்லியிருக்கிறார்' என்று ஒரு ஆன்மீகப் பேச்சாளர் விளக்கினார்.

மனிதன் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து கடைசிக் கட்டத்துக்கு வருகிறான்.

அப்பொழுது அவனிருக்கும் நிலைமையில் கடவுளை நொந்து கொள்ளத் தோன்றுமே தவிர வணங்க வேண்டும் என்று தோன்றாது.

ஆனால் அந்தச் சமயத்திலும் தன்னை வணங்குபவனுக்கு கடவுள் என்ன செய்கிறார்? அவன் செய்யும் தீமை மூலமாகவே உதவி செய்து விடுகிறாராம். சூதாட்டம் என்பது ஒரு புண்ணியமான காரியமா? அது ஒரு தீய காரியம் தான்!

இருந்தாலும் தருமர் அதில் ஜெயிக்கிறதுக்கு கடவுள் உதவி செய்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டுமாம். அதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கதையாம்!

அதற்காக, திருடப் போகிறவர்களெல்லாம் கடவுளை வேண்டிக்கொண்டு போனால் காரியம் கைகூடும் என்று நினைத்து விடக்கூடாது.

கைகூடும்! எப்படி?

விலங்கு மாட்டினால் இரண்டு கைகளும் ஒன்றாகக் கூடித்தானே ஆகவேண்டும். அப்படித்தான் கைகூடும்.

ஒரு ஆள் பத்து ரூபாய்க்கு 10 லொத்தர் சீட்டுகள் வாங்கினார். குலுக்கல் முடிந்து ரிசல்ட் வந்தது.

இவர் பேப்பரை வாங்கிப் பார்த்தார்.

ஒன்று கூட விழவில்லை. எல்லாம் போய்விட்டது. ரொம்பக் கவலைப்பட்டார்.

'கவலைப்படாதீங்க. பத்து ரூபாய்தானே போனால் போகட்டும்' என்றார் அவருடைய சிநேகிதர்.

'அது எப்படி பத்து ரூபாய் என்று சொல்றீங்க? எனக்கு 50 ரூபாய் அல்லவா நட்டம்!'' என்றார் இவர்.

"எப்படி?'' என்று கேட்டார் அவர்.

"பத்து சீட்டிலேயும் பரிசு விழ வேண்டுமென்று வேண்டிக்கொண்டு 10 தேங்காய் வேற உடைத்திருக்கிறேன்'' என்றார்.

இவருக்கெல்லாம் கடவுள் எப்படி உதவி பண்ணுவார்? இவர்தான் தேங்காய் கடைக்காரருக்கு உதவி செய்திருக்கிறார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

இராணுவத்தினரின் அனுசரணையுடன்

# யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் மிகவும் வேகமாக பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் மக்களை இதன் பிடியிலிருந்து மீட்பதற்கும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதியினால் அனைத்து படையணி தளபதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாதம் 30 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 05 ஆம் திகதிவரை டெங்கு ஒழிப்பு வாரமாக அறிவிக்கப்பட்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தின் கீழ் இயங்கும் அனைத்து படையணிகளினதும் படை வீரர்களது பங்குபற்றலுடனும் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர், பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை விரிவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் துண்டுப் பிரசுரம், போஸ்டர், விளம்பரப் பதாகை, ஸ்ரிக்கர் மற்றும் டெங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் குறுந்திரைப்படம் மற்றும் வீதி நாடகம் போன்றவற்றினூடாக மக்களை அறிவுறுத்த இராணுவத்தினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு இந்நோயின் தன்மையையும் இதனால் ஏற்படும் விளைவுகளையும் உணர்த்தி டெங்கு நோயை தடுப்பது தொடர்பாக கட்டுரை, சித்திர மற்றும் நாடகப் போட்டிகளை நடத்துவதற்கும் இராணுவம் ஒழுங்கு செய்துள்ளது.

அதற்கான அனைத்து ஆலோசனைகளும் மேலதிக கல்விப் பணிப்பாளரால் அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதியான பரிசில்களை வழங்க பாதுகாப்புப் படைகளின் தளபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.


51 ஆவது படையணி தளபதி பிரிகேடியர் சரத் விஜேசிங்கவினால் 7 பிரதேச செயலகப் பிரிவுகள் மேற்பார்வை செய்யப்படுவதுடன் 52 ஆவது படையணி தளபதி பிரிகேடியர் எல். பெரேராவினால் 4 பிரதேச செயலகப் பிரிவுகள் மேற்பார்வை செய்யப்படும்.

யாழ். பிரதேசத்தில் டெங்கு நோயினால் மரணமாவோரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதும் இந்த பயங்கரத்திலிருந்து மக்களை மீட்க இராணுவத்தினர் திட்டமிட்டுள்ள இத்திட்டம் காலத்திற்கேற்ப எடுக்கப்பட்டுள்ள சிறப்பான நடவடிக்கை என்றும் யாழ். மேலதிக பிரதேச சுகாதார பணிப்பாளர் டாக்டர் திருமதி ஜேட் சிவசங்கர் தெரிவித்துள்ளதுடன் இந்நடவடிக்கைக்கு இராணுவத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதார சேவைகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் பொது மக்களிடமும் தமது முழு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் ஆறாவது கவிதைத் தொகுதியான *சாடிகள் கேட்கும் விருட்சங்கள்* நூல்வெளியீடு எதிர்வரும் 8 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6)



யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களை வரவேற்கும் நிகழ்வில் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் கல்வியியற் கல்லூரிப் பணிப்பாளர் திருமதி புவனேஸ்வரி இராமநாதனுக்கு நினைவுப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

*27-03-2010*

*(பங்குனி 13, சனிக்கிழமை)*

*துவாதசி பிற்பகல் 3.12 மணிவரை*

*மகம் பின்னிரவு 2.23 மணிவரை*

*இராகுகாலம் 9.14-10.44 மணிவரை*

*சுபநேரம் 3.14- 4.44 மணிவரை*

*சுவாமி விபுலானந்தர் பிறந்த தினம்.*

*சனிப்பிரதோஷ விரதம்.*

*அமிர்தசித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | தொழில் சிந்தை, குடும்பக் கவலை, அதிக செலவு, காரிய தாமதம். |
| இடபம் | பயந்த சுபாவம், சுபசெலவு, பெரியோர்உதவி, கடின முயற்சி. |
| மிதுனம் | இனிய சம்பவம், பணவருவாய், வாக்கு மேன்மை, பிரயாண நன்மை. |
| கடகம் | விவாதம், பணவிரயம், சயனசுகக் குறைவு, வீண் அலைச்சல். |
| சிங்கம் | புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை, தேகநலன் |
| கன்னி | முயற்சி தாமதம், பிரயாணம், ரோக நிலை, சயனசுகக்குறைவு. |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், தன்னம்பிக்கை, பொருள் சேர்க்கை, நண்பர்கள் வருகை. |
| விருச்சிகம் | கடின முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல செய்தி. |
| தனுசு | ஆன்றோர் சந்திப்பு, தந்தை வழி உறவு, ஆரோக்கியக்குறைவு, கட்டுப்பாடு. |
| மகரம் | தொழில் நன்மை, வீண் பகை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| கும்பம் | குடும்ப சுகம், காரிய அனுகூலம், நண்பர்கள் உதவி, இனிய தகவல். |
| மீனம் | சிந்தனை மிகுதி, தொழிலில் ஆர்வம், தனவருவாய், முயற்சி கைகூடும். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 60 |
| தக்காளி | 50 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 90 | 100 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கரணைக் கிழங்கு | 20 | 30 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 110 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 280 |
| போஞ்சி | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 110 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |

# வெளிமாவட்டங்களைச் சேர்ந்த குற்றப்புலனாய்வுப்பிரிவின் 30 அதிகாரிகள் கொழும்பு வருகை

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகா சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்வதற்கும் அது தொடர்பிலான சந்தேக நபர்களையும் அரசியல் கட்சி உறுப்பினர்களையும் விசாரணைக் குட்படுத்துவதற்குமென குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 30 அதிகாரிகள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அனுர குமார திஸா நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மோதுவதற்கு ஜெனரல் பொன்சேகாவினால் மாத்திரமே முடியுமாக இருக்கிறது. இதுவே அரசாங்கத்திற்கு பாரிய சவாலாகவும் இருக்கின்றது. இந்தக்காரணத்தினாலே ஜெனரல் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டணி இவ்வாறு நசுக்கப்படுகின்றது என்றும் அவர் சொன்னார்.

கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்டதன் பின்னர் அவரது பாரியார் அனோமா பொன்சேகாவும் அவரது சகோதரியும் தனிமையிலேயே இருக்கின்றனர். இங்கு உறவினர்கள் ஆண்களாக இருந்தால் அவர்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அழைத்துச் சென்று விடுகின்றனர்.

இவ்வாறான சூழலில் தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனோமா பொன்சேகாவின் வீட்டிற்கு வந்த குற்றப்புலனாய்வுப்பிரிவினர் அவரை மாலை 4 மணி முதல் இரவு 7.30 மணிவரை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

அந்த சந்தர்ப்பத்தில் ஜெனரல் பொன்சேகாவுக்கு உணவு வழங்க வேண்டும் என்றும் அங்கு செல்வதற்கு அனுமதி அளிக்குமாறும் அனோமா பொன்சேகா கேட்டுக் கொண்டதற்கு இணங்க குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவருக்கு அனுமதி அளித்துள்ளனர்.


எனினும் மீண்டும் 9 மணியளவில் விசாரணை தொடரும் என்று அறிவித்த அதிகாரிகள் 9 மணி முதல் விடியற்காலை 2 மணி வரையில் விசாரணைகளை நீடித்துள்ளனர்.

அந்த வகையில் அனோமா பொன்சேகா சுமார் 8 மணித்தியாலங்கள் இவ்வாறு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேபோல் எமது கட்சியின் உறுப்பினர்கள் விஜித ஹேரத், டிரான் அலஸ் ஆகியோருடன் நானும் விசாரிக்கப்பட்டேன். எம்மை விசாரணைக்குட்படுத்திய அதிகாரிகள் எம்மீதான குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லை என்பதனை நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

மேலும் குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவினர் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் பல்வேறு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களே விளங்கிக் கொள்ளும் அளவில் அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவையாகும்.

ஜெனரல் சரத்பொன்சேகாவை சம்பந்தப்படுத்தி சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு பணிக்கப்பட்டதையே அவர்கள் மேற்கொள்கின்றனர்.



இது இவ்வாறு இருக்க இவ்விடயங்களை விசாரிப்பதற்கென வெளிமாவட்டங்களில் இருந்தும் 30 அதிகாரிகள் வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர் என்றார். (ஓ-6)

## தனுன திலகரட்ண தொடர்பில் கஜபா பிட்டிகலவிடம் விசாரணை

(கொழும்பு

பொலிஸாரினால் தேடப்பட்டுவரும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்ணவுக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் காலி மாவட்ட ஜனநாயக தேசிய முன்னணியின் வேட்பாளர் கஜபா பிட்டிகலவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

அவிசாவளையிலுள்ள பிட்டிகலவின் விடுதியொன்றில் தனுன திலகரட்ண தங்கியிருந்தமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அவர் தங்கியிருந்ததை ஏற்றுக்கொண்டுள்ள பிட்டிகல தனிப்பட்ட ரீதியிலான தொடர்புகள் இல்லை என தெரிவித்துள்ளதாக ஜே.வி.பி. ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(2-6)

## வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டம் நிலையறி பரீட்சை தொடர்பான (தரம் 03 முதல்9 வரையான) வினாத்தாள்களை இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் 1.00 மணி வரை தங்கள் கோட்டங்களில் பெற்றுக் கொள்ளலாம் என வேலணை வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-4)

## இலகு வேலைக்கான பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் இலகு வேலை செய்வோருக்கான ஜனவரி மாதத்திற்குரிய பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதில் அரிசி , கோதுமை மா , பருப்பு , சீனி , சமையல் எண்ணை போன்ற பொருட்கள் இலகு வேலைக்கு வழங்கப்படுகின்றது.

பயனாளிகளுக்கு ஒரு நாள் வேலைக்கு விநியோகிக்கப்படும் பொருட்கள் விபரமாக அரிசி 1 கிலோகிராம் , மா 1கிலோகிராம் ,பருப்பு 300 கிராம் ,சீனி 100 கிராம் , எண்ணெய் 0.108 லீற்றர் எனவும் குறிப்பிடப்படுகிறது. (2-4)


மனமார்ந்த நன்றி நவில்தல்கள்




கந்தசாமி கமலேந்திரன்




K.N.டக்ளஸ் தேவானந்தா




சில்வெஸ்த்திரி அலென்ரின்

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 'தம்பாட்டி' எனும் எமது கிராமத்திற்கு தினமும் வருகை தந்து எங்களது சமூக அபிவிருத்தி சம்பந்தமான தேவைகளைக் கேட்டறிந்து, எங்களது தேவைகளான கடலுணவு ஏற்றுமதிக்கான கூலர் வாகனம், கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்துக்கான நிதியுதவி மற்றும் அ.த.க.பாடசாலைக்கான 2000 லீற்றர் குடிநீர்க்கான்கள் 2 அத்துடன் எமது கிராமத்திற்கான போக்குவரத்து வசதிக்கு இலங்கை போக்குவரத்து சபையுடன் தொடர்பு கொண்டு C.T.B. பஸ் ஏற்படுத்தித் தந்தமைக்காக மாண்புமிகு சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்கட்கும் எங்களது பிரிவுக்குப் பொறுப்பான தோழர் காந்தன் அண்ணா அவர்கட்கும் எங்களது போக்குவரத்து சேவையினை சீராக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் இலங்கை போக்குவரத்துச்சபையின் வடபிராந்திய உத்தியோகஸ்தர்கள், ஊழியர்களுக்கும், எங்களது மனமார்ந்த நன்றியினை மனமுவந்து தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி! நன்றி! பலகோடி நன்றிகள்.

X ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

இவ்வண்ணம்
தம்பாட்டி கிராம அபிவிருத்தி நிர்வாகமும் தம்பாட்டி கிராமிய கடற்தொழில் கூட்டுறவுசங்கத்தினரும்- கடற்தொழிலாளர்களும் தம்பாட்டி வாழ் மக்களும், ஸ்ரீ முத்துமாரி அம்மன் பரிபாலனசபையினரும்
தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

வெற்றி பெறும் வெற்றிலைக்கே எங்கள் வாக்குகள் பூரணமாக.

(ச-4541)



முடமாவடி ஞானக்குழந்தை இல்லத்தின் பேச்சுத்திறன் காணும் வைபவத்தில் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் மங்கல விளக்கேற்றுவதையும செயலாளர் திருமதி தெ.இரத்தினகோபால் மற்றும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

# கல்வித்திட்டம் தொடர்பான சட்டமூலம் புதிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டம்

(கொழும்பு)

அடுத்துவரும் புதிய பாராளுமன்றத்தில் கல்வித் திட்டம் தொடர்பான புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர உத்தேசித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதன் மூலம் எதிர்கால கல்வித் திட்டத்தின் அபிவிருத்திக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

நாட்டின் கல்வித் திட்டத்தில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு சட்ட அடிப்படையிலான தீர்வு காண்பதற்கான பல அம்சங்களும் இப்புதிய கல்விச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலைகளுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்தல், ஆசிரியர் இடமாற்றம் ஆசிரியர்களை நியமித்தல் போன்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

மேலும் இப்புதிய சட்டமூலம் ஆசிரியர்களுக்கு போன்று பெற்றோருக்கும் நிவாரணமாக அமையும் என எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் நாவலை ஜனாதிபதி மகளிர் கல்லூரி வைபவம் ஒன்றின் போது உரையாற்றுகையில் தெரிவித்தார். (2-6)

# பயங்கரவாதத்திற்கு ஆதரவான சக்திகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு ஆதரவான சக்திகள் தொடர்ந்தும் இயங்கி வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது அதனை தடுத்து நிறுத்த முனைப்பு காட்டிய சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் இந்த நிமிடம் வரையில் இயங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த சக்திகள் சதித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஹொரணைப் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலில் ஆளும் கட்சி எதிர்நோக்கிய சவால்கள் இந்த பொதுத் தேர்தலிலும் தொடர்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# வர்த்தக கண்காட்சி -2010 கலை, கலாசார நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியில் மாலை வேளை கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

அதில் இன்று மாலை 6 மணியளவில் உடுப்பிட்டி எல்.எஸ். ஜெயநாதன் குழுவினரின் நாதஸ்வர இசை நிகழ்வும் தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் காவடி நடனமும் இரவு 8 மணிக்கு திருமதி அகல்யா இராஜபாரதியின் மாணவர்கள் வழங்கும் நிருத்தியாஞ்சலி நடன நிகழ்வும் இடம்பெறும் என யாழ் வணிகர் கழக தலைவர் தெரி வித்துள்ளார். (2)

# காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு பணியை ஒரு வருடத்துக்குள் பூர்த்தி செய்யத்திட்டம்

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைக்கும் பணிகளை ஒரு வருட காலத்தில் பூர்த்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

போர்ச்சூழல் காரணமாக சேதமடைந்து பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் உள்ள காங்கேசன்துறை துறைமுகம் நூறு மில்லியன் ரூபா செலவில் மீள மைக்கப்பட்டு வருகின்றது.

துறைமுகத்தை மீளமைக்கும் பணிகளை கடற்படையினர் மேற்கொண்டு வருவதாகவும் இதனூடாக வடபகுதியில் மேற்கொள்ளப்படும் பாரிய உற்பத்திகளை தெற்குக்கு அனுப்புவ தற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும் அமைச்சர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

காங்கேசன்துறை துறைமுகம் மீளமைக்கப்படுவதோடு வட பகுதி மக்களின் நலன்களை மேம்படுத்துவதற்கு ஏற்றவாறு இந் தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

காங்கேசன்துறை மற்றும் ஒலுவில் துறைமுகங்கள், உள் நாட்டு வர்த்தகத் துறை மற்றும் மீன்பிடித்துறை முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்யப்படுவதோடு வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கைத்தரமும் மேம் படுத்தப்படும்.

திருகோணமலை துறைமுகமும் முதலீட்டுத்துறை மற்றும் சுற்றுலாத் துறை முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்யப்படுகிறது. இந்த துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப் படுவதால் பெருமளவானோருக்கு தொழில் வாய்ப்பும் கிடைக்க வுள்ளது என்றார். (ஓ-6)

# கலாசாரப் போட்டிக்கான தேசிய விருது


(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2009 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இளைஞர் விருது வழங்கலுக்கான கலாசாரப் போட்டியில் மாவட்ட, தேசிய மட்டங்களில் முதலிடங்களைப் பெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இருவருக்கு தேசிய மட்ட விருது வழங்கப்படவுள்ளது.

இதில் குருநகரைச் சேர்ந்த செல்வி மரியாம்பிள்ளை எலிஸ் ஏன்சல்ஸ் சிறுகதையிலும் மஞ்சத்தடி இணுவிலைச் சேர்ந்த புஸ்பராசா யவர்ணா பரத நாட்டியத்திலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான தேசிய மட்ட விருது வழங்கல் மகரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-30)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இன்று 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு நிர்வாகமாணி (BBA (Hons) FM Special )பட்டம் பெறும்

**செல்வி வாசுகி இராமசாமி**
(இலங்கை வங்கி உத்தியோகத்தர்)


அவர்களை பல்கலையும் பெற்று பற்பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வராகி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

வாழ்த்துபவர்கள்:-
அம்மா,தாத்தா,அம்மம்மா,
மாமா,மாமி,தம்பி, தங்கை

(சீ/4787)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று 27.03.2010 யாழ். பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெறும் இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரணி நாகம்மாள் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

திருமதி
**சுகன்யா வின்சன்**

அளவெட்டி மேற்கு.

பாராட்டி வாழ்த்துவோர்:
திருமதி இ.நாகரத்தினம்
குடும்பம்.

(964)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (27.03.2010) MEd பட்டம் பெறும் யாழ். செட்டிபுலம் அ.த.க. பாடசாலை அதிபர்

**திரு சின்னையா எவ் சேவியர்**
(SLPS 2- II,B.A (Hons) P.G Dip.in Edu, P.G Dip.in Pub Adm,MEd)

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
அக்கா, அத்தான் ,
மருமக்கள்.

திருநெல்வேலி.

(955)

## மனமுவந்த பாராட்டுக்கள்



இருபாலையைச் சேர்ந்த சோமசுந்தரம் பத்மாசனி தம்பதிகளின் ஏகபுத்திரன்

**திரு.சோமசுந்தரம் தவநடராஜா**
(B.com,Dip in Ed Com (Sp / Trd) (ஆசிரியர் யா/ ஊரெழு ஸ்ரீ கணேசா வித்தியாலயம்)

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் டிப்ளோமா பட்டம் பெறுவதையிட்டுப் பாராட்டுவதோடு வேளா தோப்பு அம்மன் அருளாசியுடன் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சீரும் சிறப்புடன் வாழ்ந்து கல்விச் சமூகத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டி வாழ்த்துவோர்,

கற்பகப்பிள்ளையார் லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

வெள்ளியங்கிரிச் சித்தப்பா,
அமுதாச் சித்தி,
கோகுலன், லக்கி.

# ஆனந்தசங்கரியை பாராளுமன்றம் அனுப்புங்கள் மக்களின் பிரச்சினைகளை அவர் தீர்த்துவைப்பார்

## தமிழர் விடுதலைக் கூட்டணி ஊடகச் செயலாளர் கஜன் உறுதி



தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு குறித்து விளக்கமாக எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளோம். அத்தேர்தல் விஞ்ஞாபனம் பரவலாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதனை மக்கள் வரவேற்கின்றார்கள்.

அதனை விடவும், தொகுதி வாரியாக நாம் மக்களை சந்தித்து எங்களின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தி வருகின்றோம். வெறும் கோசங்களையோ, நடைமுறை சாத்தியமற்ற விடயங்களையோ முன்வைத்து மக்களை ஏமாற்ற நாம் விரும்பவில்லை. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நடைமுறைச் சாத்தியமான விடயங்களே குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊடகச் செயலாளர் த. கஜன் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. போருக்குப் பின்னான தமிழ் மக்களின் வாழ்வு குறித்து நாம் அதிக அக்கறை கொண்டுள்ளோம். முதலில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்கான செயற்திட்டமொன்று விரைவாக செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு நடவடிக்கைகள் மிக மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன.

'வடக்கின் வசந்தம்' என்று கூறப்படுவது ஒரு கவர்ச்சிகரமான கோசமாகவே உள்ளது. அதனை நடைமுறைச் சாத்தியமானதாக மாற்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மக்கள் வாக்களித்து அவர்களை பாராளுமன்றம் அனுப்புவார்களேயானால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களின் வாழ்வில் உண்மையான வசந்தம் ஏற்பட துரித நடவடிக்கைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்ளும்.

தற்போதுள்ள நிலையில் இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் காண வேண்டியுள்ளது. முதலாவது போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்கான நடவடிக்கைகளை துரிதமாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும். அதற்கு இலங்கை அரசாங்கத்துடன் வெளிப்படையான முறையில் கலந்துரையாட வேண்டும். வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று அவற்றை சரியான முறையில் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும்.




அடுத்தது, தமிழ் மக்களின் நீண்டநாள் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான தீர்வினை நடைமுறை சாத்தியமான வழியில் கையாள்வது. இதற்கு எமது தலைவர் இந்தியாவின் மாநில அமைப்பு முறையை முன்வைக்கின்றார். இதற்கு இலங்கை அரசாங்கத்தினதும், சிங்கள மக்களினதும் ஆதரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் நம்புகின்றார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு இந்தியாவின் பங்களிப்பு இன்றியமையாதது. இந்நிலையில் இந்திய மாநில அமைப்பினை நாம் முன்வைக்கும் போது இந்தியாவின் ஆதரவையும், அதேவேளை, மேற்குலகின் ஆதரவினையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் உறுதியாக நம்புகின்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான கலந்துரையாடல்கள் நீண்டகாலம் நீடிக்கக் கூடியவை என்பதால் அது தொடர்பான நகர்வுகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு நடவடிக்கைகளும் அபிவிருத்திப் பணிகளும் துரித கதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ்விரு விடயங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி சரியான வழியில் கையாளும். நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் என்று இதனையே தமிழர் விடுதலைக் கூட்டணி குறிப்பிடுகின்றது.

கடந்த காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி விடுதலைப்புலிகளை கடுமையாக விமர்சித்து வந்துள்ளது. அதேவேளையில், அரசாங்கத்தையும் விமர்சித்து வந்துள்ளது. இந்நிலையில் விடுதலைப்புலிகளின் பிரச்சினைகள் தற்போது இல்லாவிடினும் அரசாங்கத்துடனான உறவு எவ்வாறுள்ளது?

விடுதலைப் புலிகளை விமர்சித்து வந்துள்ளோம் என்பது உண்மை. அதேவேளையில் தமிழ் மக்களின் தீர்வுத்திட்டம் குறித்த அரசாங்கத்தின் போக்கு பற்றியும் நாம் விமர்சித்து வந்துள்ளோம். வன்னியில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் தமிழ் மக்களின் அழிவைத் தடுக்க விடுதலைப்புலிகளை ஒரு உடன்பாட்டிற்கு வருமாறு வற்புறுத்தினோம்.

கிளிநொச்சிப் பகுதி படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் நிலைமை மோசமாகப் போகிறது என்பதை உணர்ந்த எமது தலைவர் வீ. ஆனந்தசங்கரி இக்கோரிக்கையை விடுதலைப்புலிகளிடம் முன்வைத்தார்.

அவர் தனது பகிரங்க கடிதம் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் இக்கோரிக்கையை விடுத்திருந்தார். அதனை விடுதலைப்புலிகள் கணக்கிலெடுக்கவில்லை. அதேவேளை அரசாங்கத்திடமும் அவர் போரை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய தன் பின்னர் போர் மிகவும் தீவிரமான நிலையை அடைந்தது. போரினால் மக்கள் அதிகளவில் கொல்லப்படும் நிலைமையை மாற்றவே விடுதலைப்புலிகளிடமும், அரசாங்கத்திடமும் போரை நிறுத்தும்படி கூறினோம்.

இருதரப்பும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பேரழிவுகளுடன் போர் முடிவுற்றுள்ளது. இன்றைய நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்காகவும் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திகளுக்காகவும் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்கத்துடன் சுமுகமான கலந்துரையாடல்களை மேற்கொள்ளக்கூடிய புரிந்துணர்வுடனேயே உள்ளது என்றார். (ந)

# திலீபனின் நினைவுத்தூபி உடைப்பு தமிழருக்கான அபாய எச்சரிக்கை

## த.தே.வி. கூட்டமைப்பு வேட்பாளர் ஸ்ரீகாந்தா

"தமிழ் மக்களின் அன்பையும் அபிமானத்தையும் போற்றுதலையும் பெற்றிருந்த திலீபனின் நினைவுத் தூபி ஊர் உறங்கும் வேளையில் நள்ளிரவு நேரத்தில் உடைத்து சிதைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் மும்முரமடைந்திருக்கும் ஓர் அரைகுறை ஜனநாயகச் சூழ்நிலையில் இந்த அநியாயம் அரங்கேற்றப்பட்டுள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று திலீபனின் நினைவுத் தூபி என்றால் நாளை எது? தந்தை செல்வாவின் நினைவுத் தூபியா?"

இவ்வாறு நாவாந்துறை புனித நிக்கொலஸ் சனசமூக நிலைய முன்றலில் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் ந. ஸ்ரீகாந்தா கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் த. யூலி தயானை ஆதரித்து நடாத்தப்பட்ட இக் கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் ஸ்ரீகாந்தா தெரிவித்ததாவது,

"திலீபனின் நினைவுத் தூபி உடைத்தெறியப்பட்டது ஓர் அபாய எச்சரிக்கை ஆகும். எம்மை பொறுத்த மட்டில் இந்த விவகாரத்தை அப்படியே விட்டு விடப் போவதில்லை. இதனை தமிழ் மக்களின் சுயமரியாதைக்கு விடுக்கப்பட்ட ஓர் சவாலாகவே கருதுகின்றோம்.

பொதுத் தேர்தல் முடிந்த பின் திலீபனின் நினைவுத் தூபியை திரும்பவும் அதே இடத்தில் நிறுவுவோம். எந்தத் தடைவந்தாலும் அதனை எதிர்கொண்டு தகர்த்தெறிந்து இதனை நிறைவேற்றுவோம் என்று பிரகடனப்படுத்துகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டது. போரில் இலங்கை அரசுக்கு உதவிய இந்திய அரசாங்கத்தோடு அது ஒத்துழைத்தது.

இந்திய அரசாங்கத்தின் நிழலில் அதன் தயவில் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசியல் நடத்துகின்றனர். இந்திய அரசின் ஆதரவு இல்லையேல் இவர்களால் அரசியலில் நின்று பிடிக்க முடியாது.

இலங்கை அரசு எமது மக்களை போரில் கொன்று குவித்த போது சகல உதவிகளையும் அதற்கு வழங்கிய சோனியாகாந்தி அரசை எப்படி நம்ப முடியும்?


கௌரவமான தீர்வு ஒன்றினை இலங்கைத் தமிழர்களுக்குப் பெற்றுத் தர இந்திய அரசு உறுதியளித்துள்ளது என்கின்றனர். இது வேடிக்கையானது. ஆறுகோடி தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளையே ஈழத் தமிழர் பிரச்சினையில் சோனியாகாந்தி அரசு மதிக்கவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்த வட- கிழக்கு மாகாணம் வடக்கு என்றும் கிழக்கு என்றும் பிரிக்கப்பட்டு விட்டது. சட்ட நுணுக்கத்தை காரணம் காட்டி, இலங்கை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு வட - கிழக்கைப் பிரித்தது.

இந்திய அரசு விரும்பி இருந்தால் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வட - கிழக்கு இணைப்பை பாராளுமன்றத்தின் ஊடாக மீண்டும் கொண்டு வந்திருக்க முடியும். இதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை கூட்டமைப்பு, மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவினால் உறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்திய அரசு அக்கறை காட்டவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் சாதித்துக் கொடுத்த வட- கிழக்கு இணைப்பையே மறந்துவிட்ட, சோனியா தலைமையிலான இந்திய அரசிடம் ஆக்கபூர்வமாக எதை எதிர்பார்க்க முடியும்?

இந்திய அரசு சம்பந்தமாக போலி வாக்குறுதிகளைக் கூறி கூட்டமைப்புத் தலைமை தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கின்றது.



போரை நிறுத்தக் கூடிய அருமையான சந்தர்ப்பத்தை அதன் இறுதிக் கட்டத்தில் இந்திய பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் கூட்டமைப்பு தலைமை வேண்டுமென்றே தவற விட்டது.

இந்திய அரசாங்கத்தின் வசதிக்காக இந்த வரலாற்றுத் தவறு இழைக்கப்பட்டது. இதன் விளைவாக எமது மக்கள் மேலும் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். தமிழ்த் தேசிய எழுச்சி அடக்கி ஒடுக்கப்பட்டது. இதற்கெல்லாம் தக்க பதிலை எமது மக்கள் எதிர்வரும் தேர்தலில் வழங்க வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம், பிரசாரச் செயலாளர் என்.ஏ. செல்வநேசன், சட்டத்தரணி கனக. நமநாதன் உட்பட பலரும் உரையாற்றினர். (ந)

# பூட்டானில் ஏப்ரல் 28, 29 இல்

## நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் இலங்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

(கொழும்பு)

சார்க் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் சார்க் உச்சி மாநாடு ஏப்ரல் 28, 29 ஆம் திகதிகளில் பூட்டானில் நடைபெறும். இந்த மாநாட்டில் இலங்கை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும் என்று ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளர்களில் ஒருவருமான ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், சார்க் மாநாட்டில் இலங்கை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். இலங்கையில் யுத்தம் முன்னெடுக்கப்பட்ட காலத்திலேயே அபிவிருத்தியும் நலன்புரி விடயங்களும் முன்னெடுக்கப்பட்டன. ஒரே நேரத்தில் இந்த விடயங்களை அரசாங்கத்தினால் எவ்வாறு முன்னெடுக்க முடிந்தது.

தெற்காசிய நாடுகளில் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இலங்கையில் மட்டுமே 40 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் புதிய, பழைய வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

வறுமையில் வாழ்வோரின் எண்ணிக்கை 24 வீதத்திலிருந்து 15 வீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. வங்கிகளின் வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது. திறைசேரிகளின் முறிகளின் வட்டி 8க்கும் 10 க்கும் இடைப்பட்ட வீதத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலைமையிலேயே அடுத்த உச்சி மாநாடு பூட்டானில் நடைபெறவிருக்கின்றது.

மாநாட்டின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாட்டின் போது இலங்கை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றார். (ஓ-6)

# அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்ட குற்றத்திற்காக பஹ்ரெய்னில் இலங்கை பெண் கைது

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்டதாக கூறி பஹ்ரெய்னில் வசிக்கும் இலங்கைப் பெண் மிரியானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் பௌத்த மதத்தில் இருந்து மருவி இஸ்லாத்தை தழுவிக் கொண்டவராவர்.

அதன் பின்னர் பௌத்த மதத்தை இழிவுப்படுத்தும் வகையில் இரண்டு புத்தகங்களை வெளியிட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அண்மையில் அவர் இலங்கை வந்திருந்த போது அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும் அவர் தொடர்பில் மேலதிக தக வல்கள் எதனையும் அவர் வெளியிட வில்லை.

அவர் தற்போது மிரியானை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஓ)


## விசேட அழைப்பிதழ்

யாழ்குடா நாட்டில் உள்ள

A/L 2009

(கடந்த வருடம் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும்

& 2010 Batch

இவ்வருடம் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்குமான விசேட அழைப்பிதழ்.

எதிர்வரும் 28ம் திகதி (ஞாயிறு) & 29ம் திகதி (திங்கள்-போயாதினம்) ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் சர்வதேச கல்விக்கண்காட்சியில் கலந்துகொள்ளுமாறு வேண்டபடுகின்றீர்கள்.

இடம் : St.Patrick's College, Hall.

நேரம் : 10am - 6.00pm (Both day)

Free Entrance - பிரவேசம் இலவசம்

இக்கல்விகண்காட்சியில் 30 மேற்பட்ட தேசிய, சர்வதேச பல்கலைகழகக் கல்லூரிகள், பங்குபற்றி UK, USA, India, Ukraine, Malaysia, Singapore, Australia, New Zealand, Canada, ஆகிய நாடுகளில் தரமான உயர்கல்வியை Medicine (MBBS/MD), Engineering (Civil, Mechanical, Electronics, IT), Management, Journalism, Computer Science, Hotel Management, Etc., ஆகிய துறைகளில் கற்பதற்கான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

Organized by CEC

SIC Court

734, Hospital Road, Jaffna Tel : 0777 767 818


# த.தே.கூட்டமைப்பின் பிரிவினைவாத கோட்பாடுகள் முறியடிக்கப்படவேண்டும்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கட்சியின் பிரிவினைவாத கோட்பாடுகள் இந்தத் தேர்தலில் முறியடிக்கப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் கொள்கைப் பிரகடனங்கள் பிரிவினைவாதத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கக்கூடிய ரை, கோர்ட் அணிந்த பிரிவினைவாதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க திறமை மிக்க தேசப்பற்றுடைய இளைஞர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரகடனத் தீர்மானங்களை வென்றெடுக்கும் முயற்சியிலேயே அவர்கள் ஈடுபட்டுள்ளதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் ஐக்கிய இலங்கை தொடர்பான கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# வடக்கு-கிழக்கில் நீதித்துறையை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள்-மிலிந்தமொறகொட

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் நீதித்துறையைப் புனரமைப்பதுடன் அதனை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளதாக நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.


இதற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கியின் 7 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியில் வடக்கில் புதிதாக நீதிமன்றங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது, வட மாகாண நீதித்துறையை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயவென 15 பேர் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் ஆலோசனைக்கமைய பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

இதேவேளை அரசாங்கத்தின் செலவில் பருத்தித்துறை நீதிமன்றம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் , வடக்கிற்குத்தேவையான தமிழ் பேசும் நீதிபதிகள் சட்டத்தரணிகளை வழங்க திட்டமிட்டுள்ளதுடன் சட்ட உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் குறிப்பிட்டார். (2-6)

# பாரிய அபிவிருத்தி திட்டங்களால் 3 மில்லியன் தொழில் வாய்ப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஐந்து புதிய துறைமுகங்கள் விமான நிலையம் நுரைச்சோலை மற்றும் கெரவலபிட்டிய அனல்மின் நிலையங்கள் போன்ற அபிவிருத்திக் கருத் திட்டங்கள் மூலம் சுமார் 3 மில்லியன் புதிய வேலைவாய்ப் புக்கள் உருவாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இத்தொழில் வாய்ப்புக்கள் அரசியல் பரிந்துரைகளின் பேரிலல்லாது தகைமைகளின் அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளையும் பலவேறு தொழில் சார்ந்தோரையும் புதன் கிழமை ஜனாதிபதி அலரி மாளிகையில் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு கூறினார். இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

எந்தவொரு வெளிநாட்டு சக்தியினதும் அழுத்தங்களுக்கு நாம் ஒரு போதும் அடி பணியப் போவதில்லை, நாட்டை யாரும் கைப்பொம்மையாக்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான போராட்டத்தில் எந்தச் சவாலையும் தான் எதிர் கொள்ளத் தயார். வார்த்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பெயரளவிலான ஜனாதிபதியாக இருந்து விட்டுப்போக நான் தயாராக இல்லை.

மேலும் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பல்வேறு சக்திகள் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. அந்த அழுத்தங்களுக்கு நான் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை. எனது நாட்டின் எதிர்காலச் சந்ததிக்காக நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பு எனக்கிருக்கின்றது. அந்தக் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு உறுதிபூண்டிருக்கின்றேன் என்றார். (2-6)

# ஹற்றன்- நுவரெலிய பாதை புனரமைக்க 40 மில்லியன் டொலர் கடன் உதவி

## தென்கொரியா வழங்குகின்றது


(கொழும்பு)

ஹற்றன்-நுவரெலியா பிரதான பாதை புனரமைப்புக்கு என தென்கொரிய அரசு 40 மில்லியன் ரூபா அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்குகின்றது.

0.1 வீத வட்டி வீதத்தில் 40 வருடங்களில் திருப்பிச் செலுத் தும் விதத்திலும் 10 வருட சலுகை அடிப் படையிலும் இந்த நிதி கிடைக்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)





வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரி விழாவில் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகளையும், சங்கானைப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பொ.சந்திரவேல் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## சமூக அபிவிருத்தி மன்றத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் சர்வதேச மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மன்ற அலுவலகத்தில் மன்றத் தலைவி திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து சிறப்பிப்பதுடன் சமூக அபிவிருத்தி மன்றத்தின் தையல் ஆசிரியை திருமதி வேலாயுதம் அன்னலட்சுமியின் சேவைநலன் பாராட்டு விழாவும் சமூக அபிவிருத்தி மன்றத்தின் மூத்த உறுப்பினர் திருமதி வடிவாம்பிகை இந்திரராஜாவை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## முக்கிய பகுதிகளில் மின் விளக்குகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் எல்லைக்குட்பட்ட வீதிகளின் முக்கிய பகுதிகளில் மின் விளக்குப் பொருத்தும் திட்டத்தின் 2ஆம் கட்ட பிரதேசங்களின் 39 இடப்பெயர்கள் நகர சபையின் விளம்பரப் பலகையில் மக்கள் பார்வைக்காக ஒட்டப்பட்டுள்ளது.

1ஆம் கட்டப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு வீதி விளக்குகள் ஒளிர்வது குறிப்பிடத்தக்கது. (29-2)

## பஸ் சேவையை சீர்ப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(பொன்னாலை)

யாழ்.நகர் -காரைநகர் சாலையிடையே போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் 786 பாதை இலக்க பஸ்சேவை சீரில்லை என்று மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இப் பஸ் சேவை சீரில்லாமையால் பயணத்தை மேற்கொள்ளும் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலைக்குச் செல்வோர், தொழிலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் நீண்ட நேரம் காத்திருந்தே பல சிரமங்களுக்கு மத்தியில் பயணத்தை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுப் போக்குவரத்து நன்மை கருதி சம்பந்தப்பட்டவர்கள் குறித்த பஸ் சேவையைச் சீர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-49)

## முதியோர் இல்லத்திற்கு உடற்பயிற்சி இயந்திரம்

(சாவகச்சேரி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர் தினமும் உடற் பயிற்சி செய்வதற்கேதுவாக இரண்டு உடற்பயிற்சி இயந்திரங்களை நலன் விரும்பியொருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் என். இராஜலிங்கம் தெரிவித்தார்.

இந்த இயந்திரத்தின் உதவியுடன் காலை, மாலை இருவேளையும் முதியவர்கள் உடற் பயிற்சியில் ஈடுபடுவதாகவும் மேலும் தெரிவித்தார். (29-2)

## புதிய தொழிற் பயிற்சி கற்கை நெறிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் நீர்க்குழாய் பொருத்துதல், கணனி வன்பொருள், மரப்பொறியியல் ஆகியவற்றில் தேசிய தொழில்திறன் சான்றிதழுக்கான (NVQ III) ஆறு மாதகால கற்கை நெறிகள் ஏப்ரல் முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இக் கற்கைநெறியை பயில விரும்புவோர் விண்ணப்பங்களை மாவட்ட இணைப்பாளர், இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை, இல. 375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் கேட்டுக்கொள்கின்றார். (6-4)

## சர்வதேச கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

Sic court நிறுவனத்தின் சர்வதேச கல்விக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமையும், நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமையும் காலை 10 மணிமுதல் 6 மணிவரை சென்பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கடந்த வருடம் உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களும் இவ் வருடம் உயர்தரப் பரீட்சை பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களும் இக் கண்காட்சியில் கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியில் 30 க்கு மேற்பட்ட தேசிய சர்வதேச பல்கலைக்கழகக் கல்லூரிகள் பங்குபற்றவுள்ளதுடன் தரமான உயர் கல்வியை கற்பதற்கான தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## ஈரப்பசை காயுமுன் அகற்றப்படும் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலை முன்னிட்டு யாழ். குடாநாட்டுப் பகுதியில் ஒட்டப்படும் சுவரொட்டிகள் உடனுக்குடனும் கிழிக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்கின்றன.

ஈரப்பசை காயுமுன் இவை அழிக்கப்பட்டு பிரதான வீதிகளின் கரைகளில் பரவிக் கிடக்கின்றன.

இதனைவிட பெரிய பனர்களும் இரவோடிரவாக கிழிக்கப்படும் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

பல ஆயிரக்கணக்கில் செலவு செய்து தயாரிக்கப்படுகின்ற சுவரொட்டிகள், பனர்கள் இவ்வாறு கிழித்தழிக்கப்படுவது தொடர்பில் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஓ-2)

# இன்று ஆரம்பமாகும் வர்த்தகக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்போம்

## யாழ்.வணிகர் சங்கத் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள மக்கள் சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம்.

தென்னிலங்கையிலிருந்து வரும் பொருட்களில் நாம் தங்கியிருக்க வேண்டியதில்லை இவ்வாறு யாழ்.வணிகர் சங்கத்தலைவர் இ. ஜெயசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் இன்றிலிருந்து திங்கட்கிழமை வரை மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் ,

யாழ்ப்பாணத்தில் வருடந்தோறும் எமது கழகத்தால் நடத்தப்படும் கண்காட்சி, விசேடமாக மக்கள் அனைவரும் பார்வையிடக் கூடிய வகையில் முற்றும் முழுதாக இலவசமாக நடத்தப்படுகின்றது.

இக் கண்காட்சியில் உணவுப்பொருட்கள், மருந்து வகைகள், விவசாயம் மற்றும் மீன்பிடி உபகரணங்கள்,தளபாடங்கள், வாகனங்கள் என்பன ஒவ்வொரு காட்சிக்கூடங்களில் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் விற்பனையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறிப்பாக எமது மக்களுக்கு வெளிநாட்டிலிருப்பவர்கள் அனுப்பும் பணத்தினை வீணடிக்காது பிரதேசங்களில் சிறுகைத் தொழில்களை நிறுவி உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டால் நமது உற்பத்தியினை நாமே பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். இதனால் தென்னிலங்கையிலிருந்து வரும் உற்பத்திப்பொருட்களை தடுத்து நிறுத்திக்கொள்ளலாம்.

உதாரணமாக கோழி இறைச்சி, பால் பைக்கற் என்பனவாகும். மாடுகளை நிறைய வளர்த்தால் இயற்கையான பசுப்பாலை நாமே பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

எமது உள்ளூர் உற்பத்தியினை அதிகரிக்க ஒவ்வொரு மக்களும் விழிப்படைந்தால் தொழில் பிரச்சினையும் ஏற்படாது.

உள்ளூர் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், சந்தைப்படுத்வோர் போன்றோருக்கு உரித்தான இக் கண்காட்சியில் தென்னிலங்கையிலிருந்தும் பலர் வருகை தருவதுடன் யாழ்.குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமங்கள் மூலமும் வர்த்தகம் சார்ந்த அறிவினை பொதுமக்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்ளுமாறு சகலரிடமும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

வர்த்தக நடவடிக்கையின் புதிய முறையினை அறிந்து உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து அழிந்துபோன பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு எல்லோரும் ஒன்று திரளவேண்டும்.

கண்காட்சியில் பெருமளவான மக்கள் பங்குபற்றுதலாக சிறு, பெரு கைத்தொழில் ஆரம்பிப்பவர்கள் இருப்பின் குறைந்த வட்டி வீதத்துடன் கடன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் புது வருடத்தை முன்னிட்டு உடுபுடவைகளும் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுமெனவும், போர் நடைபெறுவதற்கு முன்னர் 100% ஆன லொறிகள் உற்பத்திப் பொருட்களை கொண்டு சென்றனர். தற்போது 15-20% ஆன லொறிகளே சேவையிலீடுபடுகின்றன. பொருளாதாரம் நலிவுற்றிருக்கின்ற இக்காலத்தில் வெளிநாட்டிலிருப்பவர்கள் இங்கு முதலீடுகளை மேற்கொண்டு தொழில் துறைகளை ஆரம்பித்தல்வேண்டும்.

இன்று காலை 9 மணிக்கு யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவினால் திறந்துவைக்கப்படும் கண்காட்சியின் மாலை நிகழ்வான கலை நிகழ்ச்சிகள் 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (2-30)




## கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(பொன்னாலை)

பொன்னாலை, மூளாய்ப்பகுதி வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகளவில் அதிகரித்துக் காணப்படுவதாக அப் பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலிகளாகத் திரியும் இந்நாய்கள் வீதிகளில் செல்லும் வாகனங்களில் மோதுண்டு விபத்துக்களை ஏற்படுத்தி வருவதாகவும் அவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்களைத் துரத்திச் செல்லும் இந்த நாய்கள், அவர்கள் வீழ்ந்து விபத்துக்களுக்கு உட்படக் காரணமாக அமைகின்றதென்றும் பொதுமக்கள் கவலையோடு தெரிவிக்கின்றனர். (ஓ-49)

# வன்னியில் போரை நிறுத்தாவிடில் உலகம் உங்களைக் கண்டிக்கும்

**வன்னியில் போர் உச்சமடைந்த நிலையில் போரை உடனடியாக நிறுத்துமாறு கோரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எழுதிய கடிதம்.**

## ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி எழுதிய கடிதம்



மேன்மை தங்கிய மகிந்த ராஜபக்ஷ,
ஜனாதிபதி,
அலரிமாளிகை, கொழும்பு-3

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கு,

**பாதுகாப்பு வலயத்துக்குள் நடப்பவை உலகை அதிரவைக்கும்**

விடுதலைப்புலிகள் ஒன்றரை இலட்சம் மக்களை பணயக் கைதிகளாக தடுத்து வைத்திருக்கும் முள்ளிவாய்க்கால் சூனியப்பிரதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் எனக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் பெரும் வேதனையையும் தருகிறது. அவர்கள் தற்போது அனுபவிக்கும் நரக வேத னையை அவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது பட்ட துன்பங்களிலும் பார்க்க மிகக் கூடுதலானதாகும்.

அவர்களுக்குக் கிடைக்கும் உணவு அவர்களுடைய தேவைகளுக்கு போதுமானதல்ல. அந்த நிலை குறைந்த அளவு உணவுப் பண்டம் வரு வதாலா அல்லது விடுதலைப்புலிகள் தம் பங்கை முன்கூட்டியே எடுத்து விடுவதாலா, இல்லாமல் இரண்டும் காரணமாக இருக்கலாம். அதன் பய னாக தாய்மாரும் , வயோதிபர்களும் போதிய சத்துணவின்றி வாடுகின் றனர். இந்த நாட்களில் நீண்ட வரிசையில் தம் பங்குக் கஞ்சிக்காக காத்து நிற்கின்றனர். தாய்பால் ஊட்டும் சக்தி இழந்த தாய்மார்கள் தம்பிள்ளைகளுக்கு புட்டிப் பாலுக்காக பல நாட்களாக காத் திருக்கின்றனர் . பயத்துடனும் பீதியுடனும் வாழும் மக்கள் கூடுதலான நேரத்தை பங்கருக் குள்ளேயே செலவிடுகின்றனர்.

இக் கொடுமைக்கு மேலாக வெசாக் பண்டிகைக்கு மறுதினம் மாலை 5 மணிக்கு ஆரம்பித்த செல் தாக்குதல் மறுநாள் காலை 7 மணிக்கு அதாவது இன்று முடிவுக்கு வந்தது. இன்று மாலை 5 மணி வரை 378 சடலங்களுடன் ஆயி ரத்து 122 படுகாயமுற்றோரும் காணப்பட்டனர். பல குடும்பங்கள் முற்றாக தம் பங்க ருக்குள்ளே முடக்கப்பட்டு விட்டன எனவும் அறிய வருகிறது. படுகாயமுற்ற பலர் வைத்தியசேவை எதுவுமின்றி கவனிப்பார் அற்று மடிந்தும் உள்ளனர். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 378 மட் டும் தானா? அல்லது விடுதலைப்பு லிகள் தவிர்த்து வேறு சில ஊடகங்கள் கூறுவது போல் ஆயிரக்கணக்கானோரா என்பது அல்ல பிரச்சினை. ஒரு நாளில் மிகக் கூடிய மரணங்கள் ஏற்பட்டது. யுத்தம் ஆரம்பமா னதின் பின்பு இந் நிகழ்வில் தான். விடு தலைப்புலிகளை ஒழிக்க உதவிய மக்களின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமாக முடிந் தது. அத்துடன் பாதுகாப்பாக இடம் பெயர்ந்தவர்கள் வரவேற்கப்படுவார்கள் என்றும் அவர்கள் நன்றாக கவனிக்கப் படுவார்கள் என்றும் அரசு கொடுத்த உத்தரவாத்ததை நம்பிய சர்வதேச சமூகத்திற் கும் பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

முள்ளிவாய்க்கால் நிலைமை நாளுக்கு நாள் கட்டுமீறி வருகின்றது. நாளுக்கு நாள் பாதிப்புக்குள்ளாவோரின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வந்து இன்று அது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தயவு செய்து உடனடியாக செல் அடிப்பதையும் ,துப்பாக்கிச் சூட்டையும் நிறுத்துமாறு பணிக்கவும் விடுதலைப் புலிகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் உங்கள் படையை நிறுத்தி வைக்க உங் களால் முடியும்.

விடுதலைப்புலிகள் தற்போது முற்றுமுழுதாக பொதுமக்களுடன் கலந்துள்ளமையால் அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் பல பொது மக்களை கொல்வதோடு அதேவேளை பலர் காயமடையவும் செய்யும். கவனயீனமாக நடப்பதால் விடுதலைப்புலிகள் எதையும் இழந்து விடப் போவதில்லை. ஆனால் அரசு இழக்க பல உண்டு, அரசின் நாணயம் உட்பட .

நான் மீண்டும் தங்களுக்கு வலியுறுத்தி கூறுவது யாதெனில் அவர்கள் மக்களோடு கலந்துள்ளமையால் தங்களுக்குள்ள ஒரே வழி விடுதலைப்புலிகளை தாக்குவதை நிறுத்தி ஐக்கிய நாடுகளின் சபையின் உதவியோ அன்றி நீங்கள் விரும்பும் வேறு யாரின் உதவியோ பெற்று அகப்பட்டுள்ள மக்களை விடுவிக்கும் வரை காலத்தை கடத்துவதே. ஐ.நா.சபையின் உதவியை நாடுவது எவ்விதத்திலும் தப்புக்கிடையாது.

வன்னி மக்கள் மீது நான் அக்கறை காட்டுவதால் என்னை தப்பாக எண்ணக்கூடாது. நான் நன்கு தெரிந்து என் மீது அதிக பாசம் கொண்டுள்ள மக்கள் அனேகர் இறந்தும், கடுமையாக காயமடைந்தும் ,தம் கால்,கைகளை இழந்தும் உள்ளனர்.நான் உங்களுக்கு 10 .04.2009 இல் எழுதிய ஓர் கடிதத்தின் ஒரு பகுதியை கீழே தருகின்றேன்.

யுத்தத்தின் கடைசிக்கட்டத்தில் புலிகள் அப்பாவிபொதுமக்களுடன் கலந்துநின்று அவர்களை மனித கேடயமாக பாவிப்பதால் ஆபத்துக் குள்ளாவோரின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது... நாம் விடுதலைப்புலிகளை யுத்தக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு இயங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் அரச படைகளால் அது முடியும். நாளுக்கு நாள் நிலைமை பயங்கரமானதாக மோசமடைந்து கொண்டிருக்கின்றது. ஆகவே உங்கள் தலையீடு மேலும் தாமதிக்கலாகாது. ஒருநாள் உண்மை நிலை உலகறியும் காலம் வரும் போது முழு உலகும் அரசையும் மக்களையும் கண்டித்து நிற்கும். சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் இதுவரை கூறி வந்ததுபோல் எமது முழு அக்கறையும் மக்கள் மீதே.

*பி.கு:- பெருந்தொகையான காயமுற்றோர் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையால் வைத்தியர்களால் அனைவருக்கும் வைத்தியம் பார்க்கமுடியவில்லை. பல காயமுற்றவர்களுக்கு 24 மணித்தியாலயங்களாக எதுவித சேவையும் வழங்கப் படவில்லை. வைத்தியசாலை ஊழியர்களின் அரைவாசியினரின் வீடுகளும் தாக்கப் பட்டமையால் கடமைக்கு வரவில்லை.*

*நன்றி*

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

**தமிழ் மக்களின் பிரச்சினையை துணிச்சலுடன் உலகறியச் செய்த மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்**

# தமிழர் விடுதலைக் கூட்டணி

(சி-4834)

# யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சி -2010

## Midea Electro Mart

யாழ். மத்திய கல்லூரியில் இன்று ஆரம்பமாகும் வர்த்தக கண்காட்சியில் LG வீட்டுப் பாவனை மின் உபகரணங்களை உத்தரவாதத்துடன் விசேட விலைக் கழிவில் கொள்வனவு செய்து பயன் பெறுங்கள். அத்துடன் இலவச விநியோக வசதியும் செய்து கொடுக்கப்படும்

LG Authorized Dealer for Abans Ltd.

Life's Good



No: 1-I,1-H Stanley Road, Jaffna, Sri Lanka

Tel: 021-2224566
Fax: 021-2221646

e-mail: midea21@gmail.com

## American

Just drink it !

### போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்

யாழ். மத்திய கல்லூரியில் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறும் யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில் உலகத் தரம்வாய்ந்த போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை சகல அளவுகளிலும் விசேட விலைக் கழிவில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண ஏகவிநியோகஸ்தர்

## E.S.P.N & Co.

இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021 222 3096 Fax: 021 222 4394

E-Mail:espn.if@ hotmail.com

---

யாழ் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறும் யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில் தனிச் சிறப்பு வாய்ந்த Canon உற்பத்திப் பொருட்களை உத்தரவாதத்துடன் விசேட விலைக் கழிவுகளுடன் பெற்றுக் கொள்ளலாம் என மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## Navahala

Authorised Distributor

## metropolitan

### Acer Extensa E270

Intel® Pentium ® Dual Core 2.5Ghz
1GB DDRII DIMM 667 MHz
160GB HDD
DVD Super Multi Double Layer
18.5" widescreen LCD Color Monitor
Modem 56Kbs Internal
Internal Card Reader
One Year Warranty

### Canon All in One

Canon MF4320D
Lazer Print, Copy, Scan


Canon MF4350D
Lazer Print, Copy, Scan, Fax

### Acer lap top Aspire 4736Z

Intel® Pentium® Dual Core processor T4300, 2.1GHz
3GB DDR2 RAM Memory
14" HD Acer Cine crystal LED LCD
320 GB S-ATA Hard Disk Drive
DVD-Super Multi Double Layer Drive
Integrated Acer Crystal Eye web cam
Blue tooth 2.1+ EDR
Multi -in-1 card reader
One Year International Traveller's (Carry-in) Warranty

Canon & HP Orignal Toner Available

### Canon IR 2318L Multi functional digital Copier/Printer



உலகத்தரம் வாய்ந்த Canon புகைப்படப் பிரதி இயந்திரங்கள் குறைந்த செலவில் தரமான பிரதிகளைப் பெறலாம் டேவலெப்பர் தேவையில்லை.

ரோணரின் விலை: **4850/-**

பிரதிபண்ணக்கூடிய அளவு: 12000 Copies-15000 Copies 64 MP நினைவகம் தொடர்ச்சியாக பிரதிகளை எடுக்கக்கூடியது.

நிபுணத்துவம் வாய்ந்த தொழில் நுட்பவியலாளர்களின் சேவை.

### Canon PIXMA IP1300

Print Speed : 22/17 black & colour
Multi Color cartridge (12 ml ink 20% more)
ID photo printing
Warranty : One year

### Canon Fax JX-210P

Technology : Inkjet fax with FINE™ Technology
Function : Print, Fax, Copy
Transmission speed : approx. 6-sec per page
Warranty : one year

### Canon Fax JX-510P

### JIA WEN 5300 A3 Print-Digital Duplicator

Fully automatic digital scanning with master Making & Printing System
Print size : Max A3 291mm*413mm
Scanning resolution: 600*600 dpi
Zoom : 50%-200% zoom
Output paper thickness : 40gsm -220gsm
Paper tray capacity : 1000 sheets
Computer connection : PC Connectivity high speed 2.0USB
Warranty: One year

### Canon Lazer Fax L-140

Technology : Lazer Jet Technology
Function : Fax, Copy
Warranty : one year

**Backed by the trusted metropolitan after sale service call now for further details**

**Hotline: 0772487204,0773664598**

**Office: 021 222 5461/2**

navahala

200,K.K.S Road, Jaffna
Tel : 021 222 5461
Fax : 021 222 5462
jaffnametropolitan@gmail.com
navahala@gmail.com

# யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சி -2010

## யாழ் வர்த்தக கண்காட்சி-2010

# அழைப்பு

## Jaffna Trade Fair & Exhibition-2010

## Invitation

இடம்:- யாழ். வேம்படி மகளிர் கல்லூரி/ யாழ். மத்திய கல்லூரி

காலம்:- மார்ச் 27,28,29 -2010

நேரம்:- காலை 9.00 மணி முதல் மாலை 8.00 மணி வரை

### பிரதம விருந்தினர்

திருமதி. யோ.பற்குணராஜா
(யாழ். மாநகர முதல்வர்)

### சிறப்பு விருந்தினர்கள்

திருமதி. ரூபினி வரதலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

திரு. மு.செ. சரவணபவ
(மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்)

திருமதி. சு.தெய்வேந்திரம்
(பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்)

திருமதி.க.பொன்னம்பலம்
(அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி)

திரு.இ.ஓங்காரமூர்த்தி
(அதிபர், யாழ் மத்திய கல்லூரி)

திரு.அஜந்த சமரக்கோன்
(பொலிஸ் அத்தியட்சர், யாழ்ப்பாணம்)

Brig .D.M.G.B.எலிகெவெல
(யாழ்.பிரதம சிவில் இணைப்பதிகாரி)

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**
**165, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி இலக்கம்:
021 222 2367
021 222 8593
021 321 1375


UNION BANK
If it's important to you, it's important to us

யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டு யூனியன் வங்கியின் வியத்தகு சேவைகளைப் பெற்று மகிழுங்கள்



புதிய தலைமுறைக்கு ஒரு புதுயுக வங்கிச்சேவை!
இலங்கை மத்திய வங்கியின் பூரண பாதுகாப்பு!
சிநேகபூர்வமான சேவைகள்!

யூனியன் வங்கி


யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறும் யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில் இலங்கையின் முன்னணி வாகன விற்பனை நிறுவனமான **இந்திரா ரேடர்ஸ்** பங்கு கொள்கின்றது என்பதை அறியத்தருகின்றோம். இக் கண்காட்சியில் கலந்துகொண்டு எமது நிறுவனத்தில் விசேட விலைக்கழிவுடன் குறைந்த விலையில் வாகனங்களை கொள்வனவு செய்யலாம் என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

Best Deals @ Unbelievable Prices


TOYOTA AXIO


INDRA TRADERS (PVT) LTD.


TOYOTA TOWN ACE


TOYOTA ALLION



Contact
நிஷாங்க:
077 2508030
சமிந்த:
077 2515347

TOYOTA HIACE


TOYOTA RUSH


HONDA FIT ARIA


NISSAN CARAVAN


TOYOTA ALLION



TOYOTA VITZ


MAZDA BONGO



தலைமைக் காரியாலயம்:
இந்திரா ரேடர்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்
இல.175,
கட்டுகஸ்தை தோட்ட வீதி,
கண்டி.



# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்




## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

**கபிலத் தத்திகள்**

நெற்பயிர்ச் செய்கையில் சேதத்தையேற்படுத்தும் சாறு உறிஞ்சும் பூச்சிப் பீடைகளுள் கபிலத் தத்திகள் (Brown plant hoppers) முக்கியமானவை. உருவத்தில் சிறிய பூச்சிகளாக இருப்பினும் கூட்டாக அதிக எண்ணிக்கையில் ஒன்று கூடி நெற்பயிரில் சாறு உறிஞ்சி தம் இனத்தை வசதிபோல பெருக்கிக் கொள்கின்றன.

கபிலத் தத்திகளை நிலப்பாவட்ட லூஜன்ஸ் (Nilaparvata Lugens) என்ற விலங்கியல் பெயர் கொண்டு அழைப்பர். இப் பூச்சிப் படை டெல்பாசிடே என்னும் குடும்பத்தின் உறுப்பினராக இருப்பதோடு மட்டுமல்லாமல் குத்தி சாறு உறிஞ்சும் வாயுறுப்பினை தனித்துவமாகக் கொண்ட வருணம் கெமிப்தீராவினுள் உள்ளடக்கப்படுகின்றது.


**சேதம்**

கபிலத் தத்திகளினால் நெற்பயிரில் ஏற்படுத்தப்படும் சேதம் விளைச்சலை நிச்சயமாகவே பாதிக்கும். குறிப்பாக நீர்மட்டத்தில் உள்ள நெற்பயிரின் பகுதியிலேயே இப்பூச்சிப்பீடை பல்கிப் பெருகி வாழும். ஆதலால் நுனிப்புல் மேய்வது போல நெல் வயலில் வெறுமனே மேற்பரப்பை அவதானிப்பதன் மூலம் இப் பூச்சிப் பீடையை கண்டு கொள்ள முடியாது. ஆனால் நெல் வயலை தூரத்திலிருந்தே அவதானித்து இதனது சேதத்தை அனுமானிக்கலாம்.

இதற்கு முன்னர் குறிப்பிட்டது போல நெற்பயிரின் நீர்மட்டத்திற்கருகில் கூட்டமாக அணங்கும் நிறைவுடலிகளாக கபிலத்தத்திகள் இருந்து நெற்பயிரிலுள்ள சாற்றை குத்தியுறிஞ்சிக் கொள்ளும். அதிகளவு எண்ணிக்கையில் சாற்றை உறிஞ்சும் போது நெற்பயிர் இந்த சேதத்திற்கு தாக்குப் பிடிக்க முடியாது நுனிப்பகுதியிலிருந்து கருகத் தொடங்கும்.

சாறு உறிஞ்சும் அளவு அதிகமாக நெற்பயிர் முழுவதுமாகவே கருகிவிடும். இந்த சேதத்தை இலகுவாக தூரத்திலிருந்து பார்க்கும் போதே கண்டுபிடித்து விடலாம். நெல் வயலில் தொட்டம் தொட்டமாக வட்ட வடிவில் எரிந்து காணப்படும்.

இதனை தத்தி எரிவு (Happer burn) என அழைப்பர். சேதம் அதிகமாகும் போது நெற்பயிர் முழுவதுமாகவே எரிந்து போன நிலையை அடையும். ஏறக்குறைய நெல் வயல் நெருப்பினால் எரிந்து போனது போல காட்சியளிக்கும். நெற்பயிரின் எந்தப் பருவத்திலென்றாலும் இப்பூச்சிப் பீடையின் தாக்கம் ஏற்படலாம். ஆனால் நாற்றுப் பருவம் பெரிதாக பாதிக்கப்படுவதில்லை. நெல் மட்டம் வெடித்து பூக்கத் தொடங்கும் பருவத்திலிருந்து அறுவடை செய்யும் காலம் வரை கபிலத் தத்திகளில் பனிக் சேதத்திலிருந்து தப்பிப் பிழைப்பது கடினம்.




**பாரம்பரிய நெல் இனங்களில் சேதம் குறைவு**

எங்களூர், உள்ளூர் அல்லது பாரம்பரிய இனங்களில் கபிலத்தத்திகளின் தாக்கம் குறைவு. கபிலத்தத்திகளின் உணவு உறிஞ்சும் தன்மையை குறைக்கும் இயல்பு உள்ளூர் இனங்களுக்கு இருப்பது ஒரு காரணம்.

இன்னொன்றாக உயர் விளைச்சலுக்காக பயன்படுத்தப்படும் கலப்பினம் செய்யப்பட்ட திருந்திய இனங்கள் நெருக்கமாக வளருவதும் அவற்றினது இலைப்பரப்பு அடர்த்தியாக இருப்பதுவும் ஆகும். கபிலத் தத்தியின் தாக்கம் இருக்கும் இடங்களில் நெற்பயிர் அடர்த்தியாக வளர்க்கப்படக்கூடாது.

அதாவது விதையினளவு பரிந்துரைக்கப்பட்ட அளவிலேயே பயன்படுத்தப்பட வேண்டும். அதிகளவு விதையெறிந்தாலோ அல்லது நெருக்கமாக நாற்று நடுகை செய்யப்பட்டாலோ நெற்பயிர்களுக்கிடையிலான நுண்ணிய காலநிலை (Micro climate) கபிலத்தத்திக்கு ஏற்ற சுவாத்தியமாக அமைந்துவிடும்.

இடங்கிடைத்தால் விரைந்து பல்கிப் பெருகிவிடும் ஆற்றல் இப்பூச்சிப் பீடைகளுக்கு இறைவன் கொடுத்த வரம் என்றே கூற வேண்டும். பாரம்பரிய நெல் இனங்களான மொட்டைக் கறுப்பன், மொறுங்கன் போன்றன உயரமாகவும், மட்டம் வெடிப்பது குறைவாகவும், அடர்த்தி குறைவாகவும் ஓரளவிற்கு கபிலத்தத்தியின் சேதத்தை தாங்கி வளர்வதன் காரணமாகவும் இவற்றில் சேதம் பெரிதாக இருப்பதில்லை. இது எங்களூர் பாரம்பரிய இனங்களுக்கு உள்ள சிறப்பியல்பு. ஏன்! உள்ளூரில் உள்ளவருக்கும் தான்! அப்படியாயின் அதிக விளைச்சல் தரும் திருந்திய நெல் இனங்களால் ஏன் தாக்குப்பிடிக்க முடியவில்லை என்பதற்கு நான் முன் குறிப்பிட்ட காரணங்களுடன் இன்னொன்றும் உண்டு. இது பற்றி பல இடங்களில் குறிப்பிட்டிருந்தாலும் இங்கே குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

திருந்திய கலப்பினப்பாக்கஞ் செய்யப்பட்ட அதிக விளைச்சலைத் தரும் நெல்லினங்கள் உள்ளீடுகளை அதிகம் நம்பி வளரும் பயிர்கள். உள்ளீடுகளில் அசேதன பசளைகளான யூரியா அதிகமாக இடப்பட்டால் நெற்பயிர் நன்கு செழித்து வளரும்.

இலைகளும் மதாளித்து நெருக்கமாகிவிடும். இந்த சூழல் கபிலத்தத்தி பல்கிப் பெருக வாய்ப்பாகிவிடும். ஆதலினால் புதிய இனங்கள் என்றுமே கபிலத்தத்தியின் தாக்கத்திலிருந்து தப்பிப் பிழைப்பது கடினம். இருந்தாலும் கபிலத் தத்திக்கு எதிர்ப்பு சக்தியுள்ள புதிய இனங்களும் உருவாக்கப்படவுள்ளன. இங்கே எதிர்ப்பு தன்மை என்பதனை விட தாங்கி வளரும் தன்மை (Tolerance) தான் அதிகமாயிருக்கின்றது.

முட்டை → அணங்கு → நிறைவுடலி என்னும் எளிய வாழ்க்கை வட்டத்தை கொண்டிருக் கும். இப்பூச்சியை கட்டுப்படுத்துவது எளிதல்ல. இதனை கட்டுப்படுத்த சிறந்த ஊடு புகுந்து கட்டுப்படுத்தும் பி.பி.எம்.சி (B.P.M.C) இனை பயன்படுத்த சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இங்கே முக்கியமான ஒன்றை கவனிக்க வேண்டும். தவறான பூச்சி நாசினி தெரிவு கபில தத்தியின் இருக்கும் இரைகௌவிகளையும் ஒட்டுண்ணிகளையும் அழித்து விடுமாதலால் கபிலத்தத்தி இலகுவில் பல்கிப் பெருக ஏதுவாகிவிடும்.

இதனை Resurgence என அழைப்பர். எனவே தான் இப்பூச்சிப் பீடையின் விவகாரத்தைப் பொறுத்தவரையில் எப்பொழுதுமே உசாராக இருத்தல் அவசியமென உங்களுக்கும் தோன்றுகின்றதல்லவா.

(தொடரும்)

# மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## மலேசிய மனித உரிமைக்குழு

(கொழும்பு)

மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 45 இலங்கைத் தமிழ் அகதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும் என மலேசிய மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

இவ் அகதிகளின் விடுதலை தொடர்பில் அவர்களின் உறவினர்கள் மலேசிய அரசாங்கத்துடன் வலியுறுத்தல் கடிதங்களை வழங்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணையகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அகதிகள் வீசாக்கள் கொண்டிருந்த நிலையிலும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இவர்களின் விடுதலை தொடர்பில் மலேசிய அரசை வலியுறுத்தி வருகின்றோம். முறையின்படி அகதிகள் ஆணையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் விடுவிக்கப்படாமல் இருக்கும் பட்சத்தில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப் போவதாகவும் அக் குழு தெரிவித்துள்ளது. (2-9)

# தேர்தலின் பின் சக்தி வாய்ந்த நாடாளுமன்றம் அமையும்

## ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

நடைபெறப் போகும் தேர்தலின் பின்னர் மிகவும் சக்தி வாய்ந்த நாடாளுமன்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹெப்பிட்டிகொலவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கையில்,

வரும் நாடாளுமன்றம் வெறும் வாதப் பிரதிவாதங்களை மட்டுமே முன்வைக்கும் நாடாளுமன்றத்தை நாம் எதிர்பார்க்கவில்லை. மாறாக சிறப்பான முறையில் செயற்பட்டு மக்களுக்கு சேவையாற்றக் கூடிய நாடாளுமன்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் அவ்வாறான நாடாளுமன்றம் ஒன்று அமையும் என்றும் கூறினார். (2-9)

# அமெரிக்க மாநில துணை ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிக்க தீர்மானம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா இலினொய்ஸ் மாநிலத்துணை ஆளுநராக அமெரிக்காவில் வாழும் ராஜா கிருஷ்ணமூர்த்தி எனப்படும் தமிழரை நியமிக்க தீர்மானித்துள்ளார்.

இவர் ஒபாமாவின் அரசாங்கத்தில் கொள்கை திட்டமிடல் ஆலோசகராக கடமையாற்றியுள்ளார்.


இலினொய்ஸ் மாநிலத்துக்கான ஆளுநர் துணை ஆளுநர் பதவிகளுக்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம் பெறவுள்ளது.


இதில் துணை ஆளுநராக ராஜா கிருஷ்ணமூர்த்தி தெரிவு செய்யப்பட்டால் அமெரிக்க மாநிலமொன்றில் இந்தப் பதவியை பெற்ற முதல் தமிழர் என்ற பெருமை இவரைச்சாரும்.

ஜனாதிபதி ஒபாமாவின் நீண்டகால நண்பரான இவர் ஒபாமாவின் தேர்தல் பிரசாரங்களில் கடந்த காலங்களில் முக்கிய பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)












யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பட்டம் பெறுவோர் மற்றும் வேந்தர், துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விருந்தி னர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் வேந்தர், துணைவேந்தர் ஆகியோர் உரையாற்றுவதையும் கலாநிதி, முதுகலைமாணி பட்டங்கள் வேந்தரால் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :றம்சன்ராஜ்,யசிகரன்)

## குற்றத்தடுப்புப் பிரிவினர் சுயாதீனமான முறையில் செயற்பட வேண்டும்

### கொழும்பு பிரதான மஜிஸ்திரேட் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவினர் சுயாதீனமான முறையில் செயற்பட வேண்டும் என கொழும்பு மாவட்ட பிரதான மஜிஸ்திரேட் சம்பா ஜானகி ராஜரட்ண தெரிவித்துள்ளார்.

ஹீல்ப்ஸ்டொப் பிரதேசத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பான ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் கொழும்பு குற்றத் தடுப்புத் பிரிவினர் பக்கச்சார்பான முறையில் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-6)

## 23 இலங்கை அகதிகள் நடுக்கடலில் சிக்கினர்

கன்னியாகுமரி கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த விசைப் படகு ஒன்றை குமரி மாவட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் கரைக்குக் கொண்டுவந்தனர். அந்தப் படகில் இருந்து 23 பேர் மீட்கப்பட்டனர்.

இதையடுத்து பொலிஸார் 23 பேரையும் பிடித்து விசாரித்தனர். இதில் படகில் இருந்து பவானிசாகர் அகதிகள் முகாமை சேர்ந்த அருணகிரிநாதன் , திருச்சியில் வசிக்கும் ரமேஸ், மதுரை அகதிகள் முகாமைச் சேர்ந்த ராஜா, சென்னையில் வசிக்கும் இமானுவேல் ஜெயக்குமார் உள்ளிட்ட அகதிகள் திருட்டுத்தனமாக இலங்கைக்குச் செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து இலங்கைப் பொலிஸார் கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் கூறுகையில்,

நாங்கள் இலங்கை செல்வதற்காக பல பகுதியில் இருந்தும் கடந்த 20ஆம் திகதி நாகர் கோவில் வந்தோம். 21ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் சென்னையைச் சேர்ந்த ஜெயகன் என்பவர் ஜான்தேவஸ் என்பவரின் ஒரு படகில் இலங்கைக்கு அனுப்பி வைத்தார். படகின் அடிப்பகுதியில் தங்க வைக்கப் பட்டோம் 22ஆம் திகதி படகு பழுதாகிவிட்டது. அதிலிருந்து 2 பேரும் சென்றனர். பின்னர் வரவில்லை என்றனர். (2-6)

## தொழில் பயிற்சிகளைப் பெற்றுள்ள 245 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

தொழில்பயிற்சிகள் மூலம் நீங்களும் உங்களது சமூகமும் நன்மை பெறுவதுடன் உயர்வடைய வேண்டும் என்பதே எமது முக்கிய நோக்கம் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 5 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தொழில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு நேற்று முன்தினம் நடை பெற்ற சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்துத்தெரிவித்த அமைச்சர் இலங்கையின் எந்தப் பாகத்திலும் இப்பேற்பட்ட தொழில் பயிற்சிகள் நடைபெறுவதில்லை என்றும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் எனக் குறிப்பிட்டு இந்த விசேட ஒழுங்குகள் ஜனாதிபதியின் சிறப்பு ஒழுங்குபடுத்தலின் கீழ் எமது அமைச்சினால் மேற்கொண்டு வரப்படுகிறது என்றும் இத் திட்டமானது 2001ஆம் ஆண்டில் இருந்து உதவி அரசாங்க அதிபா பிரிவுகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என் றும் தெரிவித்தார்.

தொழில் பயிற்சிக்கு ஏற்ப உதவித்தொகைகளையும் வழங்கி வருவதாகவும் நீங்கள் சிறப்பான முறையில் பயிற்சிகளைப் பெற்று அதன் மூலம் நீங்களும் உங்களது சமூகமும் நன்மை பெற வேண்டும் என்பதே எமது முக்கியமான குறிக்கோளாக இருக்கிறது என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அதேநேரம் பயிற்றுவித்த போதனாசிரியர்களுக்கு அமைச்சர் தனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார் அன்று 245 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (ஓ)

## பன்னிரு திருமுறைப் பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணி முதல் காரைநகர் மருதடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் மன்றத்தின் பொருளாளர் க.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரையும் பங்குபற்றி பயன் பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஸ்ணமூர்த்தி அழைக்கிறார். (ஓ)

# தாயின் பேச்சு குழந்தையின் அறிவுத்திறனை வளர்க்கும்




தாயின் பேச்சு குழந்தையின் அறிவுத் திறனை வளர்க்கும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. பொதுவாகக் குழந்தைகள் விளையாடி மகிழ அழகிய பொம்மைகள், விளையாட்டு சாதனங்கள் மற்றும் வீடியோ கேம்கள் போன்றவற்றை பெற்றோர் வாங்கி கொடுக்கின்றனர். அவை அவர்களின் அறிவாற்றலை வளர்க்கும் என நம்புகின்றனர்.

ஆனால் இவற்றை விட குழந்தைகளிடம் தாய் தொடர்ந்து பேச்சுக் கொடுத்தாலே போதும், குழந்தையின் மூளை வளர்ச்சி அடைந்து அறிவுத்திறனும் வளரும் என புதிய ஆய்வு தெரிவிக்கிறது.லண்டனில் உள்ள வடமேற்கு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இது பற்றி ஒரு ஆய்வை மேற்கொண்டனர். அவர்கள் பிறந்த 3 மாதமே ஆன 50 குழந்தையிடம் இந்த ஆய்வு நடத்தினார்கள்.

அந்தக்குழந்தைகளிடம் அவர்களின் தாய்மார்களை அடிக்கடி பேச்சுக் கொடுக்கும்படி தெரிவித்தனர். மேலும், மீன், மாடு போன்றவற்றின் படங்களை காட்டி அவற்றின் பெயர்களை கற்றுக்கொடுக்கும் படியும் வலியுறுத்தப்பட்டது.

அவர்கள் கொடுத்த பயிற்சியின்படி 3 மாதக் குழந்தைகள் படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களை உச்சரிக்க தொடங்கினர்.மேலும் பல படங்களின் மூலம் அவற்றின் பெயர்களைத் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் மூலம் குழந்தைகளிடம் தாய்மார்கள் பேச்சுக்கொடுத்தாலே போதும், குழந்தைகளின் அறிவுத்திறன் வளரும் என விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஓ-6)



அமெரிக்காவில் வீட்டுக்கு வீடு மின்சார உற்பத்திக்காக சோலார் மின் உற்பத்தி சாதனங்களைப் பொருத்துவது தற்போது அதிகரித்து வருகிறது. கலிபோர்னியா நகரில் உள்ள ஒரு வீட்டில் கலிபோர்னியா கிரீன் டிசைன் என்ற அமைப்பினர் சோலார் மின் உற்பத்தி தகடுகளைப் பொருத்தும் பணியில் ஈடுபடுவதைக் காணலாம்.

## மாடியிலிருந்து குதித்து

# தற்கொலை செய்த பெண்ணால் பாதசாரி ஒருவர் கொல்லப்பட்டார்

20ஆவது மாடியிலுள்ள தனது வீட்டிலிருந்து குதித்து தற்கொலை செய்த பெண்ணால் வீதியில் நடந்துசென்ற ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் பெல்ஜியத்தில் இடம்பெற்றுள்ளது.

67 வயதான மேற்படி பெண்மணி, புருஸல்ஸ் நகரிலுள்ள தனது மாடிவீட்டிலிருந்து குதித்ததில், தெருவில் சென்ற 72 வயது நபர் உயிரிழந்துள்ளதாக பெல்ஜிய பொலிஸார் புதன்கிழமை தெரிவித்தனர்.

தற்கொலை செய்த பெண்மணி 3 வருடங்களுக்கு முன் தனது கணவர் இறந்தது முதற்கொண்டு மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# தலிபான் தீவிரவாதிகளின் விமான குண்டு வீச்சில் 56 பேர் பலி

(ஹங்கு)

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வடக்கு வசிரிஸ்தான் மலைப் குதியில் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். அங்கு பயிற்சி முகாம்களையும் அமைத்துள்ளனர்.

எனவே, அவர்கள் மீது அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் மூலமும், பாகிஸ்தான் விமானப்படை மூலமும் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், தலிபான்களின் பலம் வாய்ந்த அப்பர் ஒரக்ஷாய் பகுதியில் பாகிஸ்தான் விமானப்படை விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின.

கால்ஜோ, மமுஷாய் பகுதிகளில் தலிபான் தீவிரவாதிகள் நடத்தி வரும் மதரசா மற்றும் பயிற்சி மையங்கள் மீது சரமாரியாக குண்டுவீச்சு நடத்தப்பட்டது. இதில் 48 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஆதம் கெல், களார், மிரோபக் லோவர் ஒரக்ஷாய் பகுதிகளில் இராணுவத் தாக்குதலில் 10பேரும், அப்பர் ஒரக்ஷாயில் உள்ள தபோரியில் நடத்திய குண்டு வீச்சில் 8பேரும் பலியானார்

மேலும் 56 பேர் காயம் அடைந்தனர். 12 பேர் கைது செய்யப்பட்டனர். காயம் அடைந்தவர்களில் மேலும் பலர் உயிரிழக்கலாம் என்றும் அதன்மூலம் இறப்பு எண்ணிக்கை 87 ஆக உயரும் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க இராணுவத்திடம் பயிற்சி பெற்ற பாகிஸ்தான் வீரர்கள் இந்தக் குண்டு வீச்சில் ஈடுபட்டனர். இதற்கிடையே வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு காணாமல் போன மலை வாழ் இனத்




தலைவர்கள் 2 பேரின் உடல்கள் தலையில்லாமல் கிடந்தது கண்டெடுக்கப்பட்டது.

தலிபான் தீவிரவாதிகளால் 6பேர் கடத்தப்பட்டனர். அவர்களில் 3 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (ஓ-6)

# ஒபாமாவின் இணையத்தள தகவல்களை திருடிய வாலிபர்

(பாரீஸ்)

அமெரிக்க அதிபர் ஒபாமா, 'டிவிட்டர்' இணையத்தளத்தில் கணக்கு வைத்துள்ளார். அதில் அவருடைய தனிப்பட்ட விபரங்கள் உள்ளிட்ட தகவல்களை பதிவு செய்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையில், பிரான்சு நாட்டைச் சேர்ந்த 25 வயது வாலிபர் ஒருவர் ஒபாமாவின் இணையத் தகவல்களை கணனி மூலமாக திருடியது தெரியவந்துள்ளது. அந்த நபரை பிரான்சு நாட்டின் இணையத்தள மோசடி தடுப்புப் பிரிவு தலைமை அதிகாரி ஆடலின் கைதுசெய்துள்ளார். இணையத் தளத்தில், 'ஹக்கர் கிரோல்' என்ற பெயரில் அந்த வாலிபர் செயற்பட்டு வந்ததும் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதிபர் ஒபாமாவின் முக்கிய தகவல்களை அந்த நபர் பரப்பி இருந்தால் பெரிய அளவில் பிரச்சினை ஏற்பட்டிருக்கும். அதிர்ஷ்டவசமாக அதுபோன்று எதுவும் நடைபெறவில்லை. ஒபாமா மட்டுமல்லாமல் ஹொலிவுட் நடிகை பிரிட்னி ஸ்பியர்ஸ் உள்ளிட்ட பல்வேறு பிரபலங்களின் கணக்குகளையும் அந்த நபர் திருடி இருக்கிறார் எனக்குறிப்பிடப்படுகிறது. (6)

# சீனாவில் 31 விரல்களுடன் வாழும் வினோத சிறுவனுக்கு அறுவைச்சிகிச்சை



(ஷென்யாங்)

சீனாவில் 31 விரல்களுடன் வாழும் 6 வயது சிறுவனுக்கு கூடுதலாக உள்ள விரல் களை அறுவைச்சிகிச்சை மூலம் மருத்து வர்கள் அகற்றவுள்ளனர்.


ஷென்யாங் நகரில் வசிக்கும் இந்த சிறுவனுக்கு வழக்கத்திற்கு மாறாக கால் பாதங்களில் 16 விரல்களும், கைகளில் 15 விரல்களும் உள்ளன. உலகில் 31 விரல்களுடன் பிறந்த வினோத சிறுவனான இவனுக்கு மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் கூடுதலான உயிரணுவின் குறைபாடு அல்லது இவனுக்கு ஏற்பட்ட இந்த மாற் றத்துக்கு உயிரணுவின் குறைபாடு அல்லது மரபு வழியாக ஏற்பட்ட பிரச்சினையாகவும் இருக்கலாம் என்று கூறுகின்றனர். (2-6)



ஐ.நா. சபையால் அரிய வகை நீர் வாழ் உயிரினமாக அறிவிக்கப்பட்டுள்ள ஹேம்மர் ஹெட் சுறாமீன்

# பாக். பயங்கரவாத முகாம்களை அழிக்க அமெரிக்கா, பிரிட்டன் உதவ வேண்டும்

## ப.சிதம்பரம் கோரிக்கை



(லண்டன்)

பயங்கரவாத பயிற்சி முகாம்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கும்படி, பாகிஸ்தானின் நட்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை அந்த நாட்டுக்கு நெருக்கடி கொடுக்கவேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் அரசு முறைப் பயணமாக பிரிட்டன் சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், பாகிஸ்தான் அரசு தங்கள் நாட்டில் செயல்படும் லஷ்கர்-இ-தொய்பா, அல்-கொய்தா போன்ற பயங்கரவாத அமைப்புக்களைக் கட்டுப்படுத்த போதிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதேபோல், அந்தநாட்டின் உளவு அமைப்பான ஐ.எஸ். ஐயை கட்டுப்படுத்தவும் முயற்சி எடுக்கவில்லை.

அங்கு செயல்படும் பயங்கரவாத பயிற்சி முகாம்களை அடியோடு ஒழிக்க, பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பதையும் நிறுத்த வேண்டும். இந்த விடயத்தில் பாகிஸ்தானின் நட்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை அந்த நாட்டுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும்.

பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத அமைப்புக்களால், இந்தியாவுக்கு மட்டுமல்லாமல், அனைத்து நாடுகளுக்கும் ஆபத்துத்தான். இதை மற்ற நாடுகள் உணரவேண்டும்.

புனே குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு முன்னதாக, போதிய உளவுத் தகவல்கள் கிடைத்தன. இதுகுறித்து மாநில அரசுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. மாநில அரசும் பாது காப்பை அதிகரித்தது. இருந்தாலும் ஜேர்மன் பேக்கரி நிர்வாகம், குறைந்தபட்ச பாதுகாப்பு நடவடிக்கைகளை கூட எடுக்கவில்லை. இதனால் துரதிர்ஷ்டவசமாக குண்டு வெடிப்பு நிகழ்ந்து விட்டது.

புனே குண்டுவெடிப்பில் பாகிஸ்தானுக்கு தொடர்பு உள்ளதா என்பதை தற்போது கூற முடியாது.

இதுகுறித்து விசாரணை நடந்து வருகிறது. விசாரணை முடிந்தபின் தான், இதுகுறித்து தெரிவிக்க முடியும். இவ்வாறு சிதம்பரம் கூறினார். (6)




வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச மகளிர்தின விழாவில் தலைமை தாங்கிய உதவிப் பிரதேச செயலர் செல்வி பிறேமினி சபாரட்ணம் மற்றும் பிரதேச செயலர் சி. ஏ. மோகன்றாஸ், பிரதம. விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# வடக்கு – கிழக்கு இணைப்பா? எமது அனுமதியும் வேண்டும்

## மட்டக்களப்பு ஐ.தே.க. வேட்பாளர்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகள் வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக பேசி வருகின்றன.

ஆனால் அதனை இணைப்பதானால் எமது அனுமதிகளும் பெறப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பசீர் செகுடவூட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் மக்கள் மிகப்பெரும் காணிப் பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளார்கள். எமக்கு அம்பாறை பகுதியில் போதுமான காணிகள் இல்லை.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பில் தமிழ்க்கட்சிகள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றன. ஆனால் அதனை இணைப்பதானால் எமது அனுமதிகளும் பெறப்படவேண்டும்.

தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் அரசியல் தீர்வை ஒத்த தீர்வு ஒன்றை அரசு முஸ்லீம் மக்களுக்கும் முன்வைக்க வேண்டும். ஏனெனில் தமிழர்களும் முஸ்லீம் மக்களுமே இலங்கையில் சிறுபான்மை இனங்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# இராணுவ சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தும் யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்படும்

## விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தும் யோசனைத் திட்டமொன்று முன் வைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி அவசரகாலச் சட்ட நீடிப்பிற்காக பாராளுமன்றம் கூடும்போது இந்த புதிய சட்டத் திருத்தம் குறித்த பரிந்துரை முன் வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்கு இராணுவச் சட்டத்தில் விலக்களிக்கப் பட வேண்டுமென்ற யோசனைத் திட்டம் முன் வைக்கப்படவுள்ளது.

1949 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க இராணுவச் சட்டத்தின் 24 ஆம் சரத்தில் இந்த விடயம் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த சரத்தை விடவும் மிகவும் தெளிவான முறையில் சட்டத் திருத்தமொன்றை அறிவிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். புதிய யோசனைத் திட்டம் தொடர்பான பரிந்துரைகள் ஏற்கனவே பாராளுமன்ற செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்ட திருத்த யோசனைத் திட்டங்களை முன்வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை நடைபெற இருந்த அதிபர் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## யாழ். மத்திய கல்லூரியின்

# பழைய மாணவர் சங்கத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கு ஒரு மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கினார்.

நேற்று முன்தினம் காலை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வின் போது கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாகிகளிடம், அங்கு கல்வி பயிலும் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்த நிதி உதவியை அமைச்சர் வழங்கினார்.

வறிய மாணவர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாது இடை நடுவில் கல்லூரிகளை விட்டு வெளியேறுவதைக் கவனத்தில் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அத்தகைய வறிய மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவும் பொருட்டு இத்தொகையை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே நேரம், புலம்பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர்களிடமிருந்து நிதி உதவிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை தான் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்னும் சில மாதங்களில் யாழ்.மத்திய கல்லூரியின் கோரிக்கையான பேருந்து ஒன்றைப் பெற்றுத்தரவும் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (ஓ)

# சக்தி ரீ.வி. தாக்குதல் வீடியோ நாடாவை கையளிக்க உத்தரவு

(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள சக்தி தொலைக் காட்சி தாக்குதல் சம்பவம் தொடர்பில் வீடியோ ஒளித்தொகுப்பு நாடாவை பொலிஸாரிடம் கையளிக்குமாறு சிரச தொலைக்காட்சி நிர்வாகப் பணிப்பாளரிடம் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொம்பனித்தெரு பொலிஸாரிடம் இந்த வீடியோ ஒளிநாடாவைக் கையளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (2-6)

# பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ள முடியாது

பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமனம் தொடர்பில் அரசாங்கத்தினால் பின்பற்றப் படும் நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள முடியாதென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

குறிப்பாக குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இந்திக்க பண்டார நாயக்க மற்றும் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் அவர்கள் தொடர்ந்தும் தமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களாக நீடிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்பதில் எவ்வித சட்ட சிக்கலும் கிடையாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

# பிள்ளைகளை தத்தெடுப்பதில் அதிகளவானோர் நாட்டம்

## சிறுவர் பராமரிப்பு திணைக்களம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் பிள்ளைகளை தத்தெடுப்பது தொடர்பான விண்ணப்பங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

கடந்த காலங்களை விடவும் தற்போது அதிகளவானோர் பிள்ளைகளைத் தத்தெடுப்பதற்கு நாட்டம் காட்டி வருவதாக சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் பீ.டி.எஸ். அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பிள்ளைகளை தத்தெடுப்பதற்காக வருடாந்தம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தமக்கு கிடைக்கப் பெறுவதாகவும் தற்போது இந்த எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு எற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும் போது,

குழந்தைகளின் பெற்றோரின் பரிபூரண சம்மதத்துடன் மட்டுமே இலங்கையில் பிள்ளைகளை தத்தெடுக்க முடியும். 80 வீதமான பெற்றோர் தங்களது பிள்ளைகளை தத்துக் கொடுக்க விரும்புவதில்லை என்றார்.

மாவட்ட நீதிமன்றின் ஊடாகவோ அல்லது சிறுவர் பராமரிப்பு அதிகார சபையின் ஊடாகவோ தத்தெடுப்பது தொடர்பிலான கோரிக்கையை விண்ணப்பிக்க முடியும் என மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் வருடாந்தம் 90 பிள்ளைகள் மட்டுமே இலங்கையர்களினால் தத்தெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் புகலிட நிவாரணநிதி இடைநிறுத்தம்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பும் போது அவர்கள் சுமுக வாழ்க்கையை மேற் கொள்வதற்கு உதவியாக வழங்கிவந்த புகலிட நிவாரண நிதியை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் இடைநிறுத்தியுள்ளது.

தங்களுக்கு கிடைக்கும் நிதியில் பற்றாக்குறை ஏற்பட்டதே அகதிகளுக்கான புகலிட நிவாரண நிதி வழங்குவதில் ஏற்பட்ட தடைக்கு காரணம் என்று மேற்படி தன்னார்வ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிவாரணக் கொடுப்பனவு கடந்த 8 ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# இலங்கை வங்கியின் புதிய கடன்திட்ட அறிமுகமும் கடன் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண அபிவிருத்தி கடன் திட்டம், வடக்கின் வசந்தம் திட்டம் என்பவற்றின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளினால் ஒன்றிணைக்கப்பட்ட கடன் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மத்திய வங்கியின் ஆளுநர் டாக்டர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் ஐ.டி.வீரசேன ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இதில் மத்திய வங்கியின் அனுசரணையுடன் புதிய கடன் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இதில் கலந்து பயன்பெறுமாறு வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் வீ.சி. சிவநாதன் அறிவித்துள்ளார். (6-4)

# கந்தளாய்க்குளம் புனரமைப்பு

(கொழும்பு)

உலக வங்கியின் நீர்முகாமைத்துவ உதவித் திட்டத்தின் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குளங்களில் மிகவும் முக்கியமான குளமான கந்தளாய்க்குளம் புனரமைக்கப்படவுள்ளது.

இக்குளமானது திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர்த்திட்டத்துக்கு பயன்படுத்துவதற்கும் 215 சதுர கிலோமீற்றர் விவசாய நிலங்கள் செய்கை பண்ணுவதற்கும் தம்பலகாமம் கந்தளாய்ப்பகுதி மீனவர்கள் மீன்பிடிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

114 ஆயிரம் சதுர அடிகள் நீர்கொள்ளக் கூடிய வகையில் இக்குளம் அமைக்கப்பட்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு அணைக்கட்டு வெடிப்புக்குள்ளாகி பெருக்கெடுத்த பின்னர் மேற்கொள்ளப்படும் பாரிய புனரமைப்புப் பணி இதுவேயாகும். இதன்மூலம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதிகால மனிதனின் எலும்புகள் கண்டுபிடிப்பு

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு சைபீரிய நாட்டு குகையில் வினோதமான ஒரு உயிரினத்தின் எலும்புத்துண்டுகளை தொல்லியல் நிபுணர்கள் கண்டுபிடித்தனர். அந்த உயிரினத்தின் கைவிரல்கள் மிகவும் சிறியதாக இருந்தன. எனவே எலும்பைக் கொண்டு டி.என்.ஏ. சோதனை நடத்தப்பட்டது.

அப்போது இந்த எலும்புகள் ஆதிகால மனிதனுடையது என்று தெரியவந்தது. மேலும் அந்த மனிதன் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

இந்த எலும்புகளை வைத்து தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.(2-6)

# சங்கடஹர சதுர்த்தி விரதபூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய சங்கடஹர சதுர்த்தி விரத பூஜை எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (6-4)

# பிரசாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச மார்க்கசியக் குழுவின் "பொதுத் தேர்தல் 2010 ஆம் மீதிப் பாதையும்" சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு 189, வேம்படி வீதியில் அமைந்துள்ள அகவிழி காரியாலயத்தில் சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (ஓ-4)

# பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் பயிற்சி முடித்து வெளியேறிய மாணவர்களுக்கு எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்கள் பரீட்சைக்குத் தவறாது தோற்றுமாறும் பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி க.தா.சிவபாதம் கேட்டுள்ளார். (6)

# விளையாட்டு விழா

நுணாவில் சர்வ சாதன சங்க சனசமூக நிலையத்தின் பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் க.மோகனதாசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபையின் வேலைகள் அத்தியட்சகர் கு.செல்வரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

# பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வங்கியியல் CBF,DBF பரீட்சை இன்றும் நாளையும் யா/திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஓ-4)

# நேர்முகப் பரீட்சை


( அல்வாய்)

மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்து.

இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது, அதிபர் நியமனக் கடிதம், அதிபர் சேவை வகுப்புகளிற்கான உள்வாங்கல் கடிதங்கள், கல்வித் தகைமைச் சான்றிதழ், தொழில் தகைமைச் சான்ழிதழ், இறுதி 3 ஆண்டு களில் பெற்ற லீவு விபரம், ஆங்கில மொழித் தேர்ச்சியை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஆகிய ஆவணங்களை கொண்டு வருமாறும் இதற்கான எழுத்துப் பரீட்சை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)


ஓம்
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"





## யாழ்.தீவகம் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான
## இரதோற்சவ மண்டப (தேர்முட்டி) திறப்புவிழா



திருச்சிற்றம்பலம்
வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் – மாமலரால்
நோக்குண்டாம் மேனி நுணங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்குள
திருச்சிற்றம்பலம்

விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் பங்குனித்திங்கள் 13ஆம் நாள் 27.03.2010 சனிக்கிழமை துவாதசித் திதியும் மக நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் இடப லக்கினமும் கூடிய காலை 10.47 மணிமுதல் 11.10 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற இரதோற்சவ மண்டப சாந்தி விழாவும் அதனைத் தொடர்ந்து மூலமூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனையும் இடம்பெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**கிரியாகால விபரம்**

26.03.2010 (வெள்ளிக்கிழமை) :- மாலை 5.00 மணி முதல் -விநாயகர் வழிபாடு , நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி, திருமுறைப்பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்
27.03.2010 (சனிக்கிழமை) :- காலை 7.00 மணி முதல் -விநாயகர் வழிபாடு , மஹாயாகபூஜை, மூலமூர்த்தி அபிஷேகம், சாந்தி அபிஷேகம், விசேடபூஜை

பிரதிஸ்டா குரு :- **கிரியாமணி சிவஸ்ரீ நா.குகனேசக்குருக்கள் (உடுவில்)**
உபயம் :- அமரர் ஐயம்பிள்ளை நடராசா ஞாபகார்த்தமாக குடும்பத்தினர்
கட்டட நிர்மாண மேற்பார்வை :- திரு.ம.கெங்காதரன் (வன்னியசிங்கம் வீதி, தாவடி)
வர்ண வேலை :- திரு.V.P.தாசன் (குருநகர்)

ஆலயப் பூசகர் :- பிரம்மஸ்ரீ பா.கணநாதசர்மா
கட்டடநிர்மாணம் :- திரு.ச.சக்திவேல் (வட்டுக்கோட்டைவடக்கு, சித்தன்கேணி)
ஆசாரியார் :- திரு.செ.ஜெயராஜா (சண்டிலிப்பாய் வீதி, சங்கானை)
விசேடமங்கள வாத்தியம் :- திரு.வடிவேல் செல்வராஜா (புளியங்கூடல்)

**நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் மகேஸ்வரபூஜை (அன்னதான) நிகழ்வில் கலந்துகொண்டு எம்பெருமானின் விசேட இஷ்டசித்திகளையும் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

**உபயகாரர்கள்**
**மைதிலி நகைமாடம்**
**89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**நியூ நகுலா நகைமாடம்**
**45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**ஆலய பரிபாலன சபையினர்**
**வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேஸ்தானம்**
**மண்கும்பான்.**

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

நாக்கு ஒரு கொடிய மிருகம். ஒருமுறை அதை அவிழ்த்து விட்டால் திரும்பவும் அதைக் கட்டுவது கடினம். —எகிப்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நீங்கள் எதுவும் சொல்லலாம் ஆனால் 'ஒற்றுமை' அவசியம்

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் அன்பிற்குரிய வேட்பாளப் பெருமக்களே! தேர்தலில் வெற்றிபெறுவதற்காக நீங்கள் எடுக்கும் பகீரதப் பிரயத்தனம் கண்டு மனம் நெகிழ்கிறது.

எல்லோரும் வெற்றி பெறுங்கள் என்று வாழ்த்துவது அப்பாவித் தமிழ் மக்கள் ஆகிய எம் கடமையாயினும், இலங்கையின் அரசியல் யாப்புகளும், நாடாளுமன்றச் சட்டதிட்டங்களும் அதற்கு இடம் கொடுப்பதாக இல்லை.

324 பேர் போட்டியிடும் யாழ் மாவட்டத்தில் ஒன்பது பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். எனவே போட்டியிடும் அத்தனை பேரும் நாடாளுமன்றம் செல்வது முடியாத காரியம்.

இருந்தும் வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து தேர்தல் பிரசாரம் முடியும்வரையுமான நாட்களுக்குள் நீங்கள் ஆற்றுகின்ற உரைகள், வெளியிடுகின்ற அறிக்கைகள் வழங்குகின்ற உறுதி உரைகள்.

இவற்றைப் பார்க்கும் போது, இறைவா! இவர்கள் அனைவரையும் நாடாளுமன்றத்திற்கு அனுப்பமாட்டாயா? இவர்கள் நாடாளுமன்றம் சென்றால் எங்கள் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

இதை நான் சொல்லவில்லை இறைவா! அவர்கள் சொல்கிறார்கள். இதற்கு ஏதாவது வழியுண்டா என்று இறைவனைக் கேட்டேன்.

எனது கேள்விக்கு இறைவன் சொர்ப்பனத்தில் பதில் தந்தான்.

அடே! அற்பப்பயலே! நீ என்னிடம் கேட்பது நடக்குமடா! அதை உனது வேட்பாளர்களிடம் சொல்.

உங்களுக்கென்று ஒரு நாடாளுமன்றம். உங்களுக்கென்று ஒரு சட்டசபை. உங்களுக்கென்று மாநில அரசு. உங்களுக்கென்று இன்னும் எது எது இருக்க வேண்டுமோ அதெல்லாம் இருக்கும் போது நீங்கள் கேட்பது கிடைக்கும்.

இதற்கெல்லாம் உங்களிடம் ஒற்றுமை வேண்டும். உங்கள் பரம்பரையில் ஒற்றுமை இருக்கிறதா? இறைவன் அதட்டினான்.

ஒற்றுமையாக இருக்காத இனம் தமிழினம் என்று நீங்கள் விதி எழுதிவிட்டு இப்போது அதட்டினால் நாம் என்ன செய்ய முடியும் இறைவா! என்ற எனது கேள்வி இறைவனுக்கு கோபத்தை உண்டு பண்ண,

டேய்! பத்திரிகையாளா? பாரடா சிங்களவரை, நிபுணர்கள் குழுவை ஐக்கிய நாடுகள்சபை நியமிப்பதை ஜனாதிபதி எதிர்க்கிறார். அரசு எதிர்க்கிறது. ஏன் சிறையில் இருக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கட்சியும் எதிர்க்கிறது.

எப்படியிருக்கிறது அவர்களின் ஒற்றுமை.

ஆனால் தமிழர்களைப் பார் எங்கேனும் ஒற்றுமைப்படுகிறார்களா?

தங்கள் இனத்தை-சமயத்தைக் காப்பாற்ற சிங்கள மக்கள் ஒன்றுபடும் சிறப்பைப் பார். அதைப் பார்த்தேனும் நீங்கள் ஒற்றுமைப்பட்டால் 324 பேர் மட்டுமல்ல; ஐந்நூறு பேரும் உங்கள் நாடாளுமன்றத்திற்குச் செல்லலாம். இறைவன் இப்படிக் கூற,

அந்த உறக்கத்திலும் ஏன் இறைவா? தேர்தல் விளம்பரத்தில் கைவைக்கிறியள் என்று நான் சொல்ல,

இறைவன் கடுப்பேறி தன் சூலாயுதத்தை தூக்கி 'உன் சுயநலம் ஒழிக' என்று எறிய,

திடுக்குற்று எழுந்த நான் வீதிக்கு ஓடிவந்து பார்த்தபோது சுவரோவியமாக நின்ற வேட்பாளப் பெருமக்களின் வண்ண முகங்கள் மின்னொளியில் பட்டுத்தெறிக்க,

ஏற்கனவே ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் 'உள்ளே மறைந்திருக்கும் எங்களுக்கும் சுதந்திரம் வேண்டும்' என முனகும் சத்தம் கேட்டு முகத்தை கைகளால் பொத்திக் கொண்டேன்.

சொரிகின்ற கண்ணீரைத் தாங்கி இறைவா! எங்கள் இனத்திற்கு ஒற்றுமை உணர்வைத் தா? என்று கெஞ்சினேன். இதைவிட என்ன செய்ய முடியும்!

# தபால் மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைக்காதவர்களின் வாக்குகள் இரத்தாகாது

## தேர்தல்கள் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காதவர்களின் வாக்கு இரத்தாகாது என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிக்க முடியாது போனவர்களுக்கு ஏனைய வாக்காளர்களுக்குப் போன்றே வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தபால் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் தொடர்பாக பல்வேறு பகுதிகளிலும் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், இம்முறை தபால்மூலம் வாக்களிப்பதற்காக 4 இலட்சத்து 77 ஆயிரத்து 10 விண்ணப் பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இதில் 4 இலட்சத்து 15 ஆயிரத்து 419 விண் ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் 61 ஆயிரத்து 691 விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டுள்ளன.

இதனிடையே உரிய நேரத்தில் அத்தாட்சிப் படுத்தும் அதிகாரியிடம் ஆவணங்கள் கையளிக்கப்பட்ட போதிலும் மகியங்கனை கோட்டக்கல்விப் பணிமனையை சேர்ந்த சிலரது தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மகியங்கனைச் செயலாளர் எவ்.ஜே.சுமதிபால தெரிவித்துள்ளார்..

இது தொடர்பாக பதுளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவிக்கையில், இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக 27 ஆயிரத்து707 பேருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

காலதாமதமாக கிடைத்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். சில அத்தாட்சிபடுத்தும் அதிகாரிகள் உரிய நேரத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்காதமை இத்தகைய பிரச்சினைகள் எழுவதற்கான காரணமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை காலதாமதம், அத்தாட்சிப்படுத்தப்படாமை, வாக்காளர் பெயர்ப்பட்டியலுடன் பொருந்தாமை போன்ற காரணங்களுக்காக தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதாகவும் இத்தகைய பிரச்சினையை எதிர்கொண்டுள்ள தேர்தல் கடமைகளில் ஈடுபட் டுள்ள அரச ஊழியர்கள் அதிகாரிகளுடன் கலந்துரையாடி பொதுத் தேர்தல் தினத்தன்று தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் எனவும் இது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் மேலும் தெரிவித்தார். (2-4)

## ஒப்பந்த அடிப்படையிலான நடமாடும் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம்கோரல்

வலிகாமம் கல்வி வலயத்தில் நிலவும் ஒப்பந்த அடிப்படையிலான நடமாடும் உத்தியோகத்தர் பதவிக்கு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தகுதியான விண்ணப்பதாரிகள் சுயவிபரத்தினை தாங்களே தயாரித்து ஏப்ரல் மாதம் முதலாம் திகதியன்று வலிகாமம் கல்வி வலய அலுவலகத்தில் தங்கள் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதுடன் அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள நேர்முகத்தேர்வில் தமது தகுதிகளை நிரூபிக்கும் ஆவணங்களை சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் சமூக விஞ்ஞானத் துறையில் பட்டதாரியாக இருப்பதுடன் 25-35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கணனியறிவைக் கொண்டிருப்பதுடன் வாகன அனுமதிப்பத்திரமுள்ள சொந்த வாகன தாரியாகவும் இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பதவியானது வலிகாம கல்வி வலயப்பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கட்டாயக் கல்விக் குழுவின் செயற்பாடுகளை வலுப்படுத்தும் எனவும் ஆங்கில அறிவும், சமூக சேவை அனுபவமும் கொண்ட வலிகாம வலய எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (2-6)

## வீடுகளை விடுதிகளாக மாற்றியமைப்போர் பிரதேச சபையின் அனுமதி பெற வேண்டும்

### வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் அறிவிப்பு

வலிகிழக்கு பிரதேச சபையின் எல்லை பிரதேசத்தில் உள் வீடுகளை விடுதிகளாக பாவிக்கும் வீட்டு உரிமையாளர்கள் உடனடியாக அந்த பகுதி பிரதேச சபையின் உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக உல்லாசப் பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருப்பதுடன் அவர்கள் யாழ். நகரப்பகுதியில் தங்குவதற்கு விடுதிகள் போதிய அளவு இல்லாமையால் எமது பகுதிகளை நோக்கி வருவதனால் வீடுகள் விடுதிகள் ஆக மாறி வருகின்றது. ஆகவே அவ்வாறு மாறிவரும் விடுதிகள் வலிகிழக்கு பிரதேச சபையின் அனுமதி பெற வேண்டும் என்பதுடன் அவ்வாறு மீறுவோர் மீது பிரதேச சபை கட்டளைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (2-6)

# காணாமல் போன ஊடகவியலாளரின் விசாரணை குறித்து அரசு அறிவிக்க வேண்டும்

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்நலிகொட தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் விபரங்களை வெளியிட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட வேண்டும் என எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசை விமர்சித்த ஊடகவியலாளர் பிரகீத் எக்நலிகொட காணாமல்போய் இரு மாதங்கள் கடந்துள்ளன. எனினும் அவரை கண்டறிவதற்கு பொலிஸார் அதிக அக்கறைகளைக் காண்பிக்கவில்லை.

அரச தரப்பு அமைச்சர்கள் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். எக்நலிகொட தானாகவே காணாமல்போயுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனவே அவருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ தகுந்த ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

ஊடகத்துறையினருக்கு எதிராக தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் அண்மைய சம்பவம் கடந்த புதன்கிழமை (24) நிகழ்ந்துள்ளது. அரச ஆதரவாளர்கள் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி அரசு, எதிர்க்கட்சி ஆதரவாளரான றுவான் வீரக்கோன் என்ற ஊடகவியலாளரையும் கைது செய்துள்ளது. அவர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை அங்கு கைது செய்யப்பட்டுள்ளார் என அது மேலும் தெரிவித்துள்ளது. (சு-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### மதமும் ஒழுக்கமும்

"நான் மதப்பற்று உள்ளவனாக இருக்க விரும்பினேன். இந்தத் தத்துவங்களை எல்லாம் அனுபவித்து அறிந்து கொள்ள விரும்பினேன். ஆனால் அவ்விதம் அவற்றை என்னால் அனுபவித்து அடைய முடியாமற் போய்விட்டது. ஆதலால் நான் எதையுமே நம்புவது கிடையாது" என்று சொல்லுகிற பல மனிதர்களை நீ இந்த உலகிலே பார்க்கலாம்.

படித்தவர்களில் கூட இப்படிப்பட்டவர்கள் இருப்பதை நீ காணலாம். "என் வாழ்நாள் முழுவதும் மதப்பற்று உள்ளவனாக இருப்பதற்கு நான் முயற்சி செய்தேன்; ஆனால் அதிலே ஒன்றுமில்லை" என்று மக்களில் பலர் உன்னிடம் சொல்வார்கள். ஆனால் அதே சமயத்தில் நீ இந்த நிகழ்ச்சியையும் காண்பாய்.

# இரகசிய உடன்பாடு என வதந்தி பரப்புகிறார்கள்

## டாக்டர் ராமதாஸ் குற்றச்சாட்டு

(சென்னை)

பொன்னாகரத்தில் தி.மு.க.வுக்கும், பா.ம.க.வுக்கும் இடையே இரகசிய உடன்பாடு ஏற்பட்டு விட்டதாக வதந்தி பரப்பி வருகிறார்கள் என்று டாக்டர் ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் பா.ம.க.நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது,

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பொன்னாகரம் மக்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்குங்கள். என்று வாதாடி நமது தொண்டையும் வறண்டுவிட்டது.

காவிரிக் கரையில் வாழும் இந்த மக்களுக்கு, காவிரி குடிநீரை கொண்டு வரும் திட்டம் அரைநூற்றாண்டு காலமாக நிறைவேற்றப்படாமல், இன்றளவும் கிடப்பில் போட்டு வந்திருக்கிறது. தொகுதி முழுவதும் ஒரு குடம் தண்ணீர் 3 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

படித்த இளைஞர்களுக்கும், பாமரர்களுக்கும் வேலை இல்லை. அண்டை மாநிலங்களுக்கும் ,மாவட்டங்களுக்கும் சென்று கொத்தடிமைகளாக வேலை பார்த்து வருகிறார்கள். இந்தக் கொடுமைகளையெல்லாம் மறைக்க, பணமூட்டைகளை தொகுதிக்குள் இறக்கி வாக்காளர்களையும், மாற்றுக்கட்சியின் நிர்வாகிகளையும் விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆளும் கட்சியினர் கடைசி ஆயுதமாக பா. ம.க.வுக்கும் தி.மு.கவுக்கும் ஏதோ இரகசிய உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக வதந்திகளை பரப்பி குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த வதந்தியை யாரும் நம்பமாட்டார்கள். (ஓ-6)

# திருப்பதியில் தங்க தகடு பதிக்க ரூபா 6 கோடி அன்பளிப்பு

(நகரி)

இராமநவமியையொட்டி திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சீதா -இராமர், இலட்சுமணருக்கு சிறப்பு பூஜைகள் நடந்தன. அனுமாருக்கும் தனியாக பூஜைகள் செய்யப்பட்டது. பின்னர் திருமாட வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தன.

இராமநவமியையொட்டி பெங்களூர் தொழில் அதிபர் விஜய் மல்லையா திருமலையில் தனது குடும்பத்தினருடன் சாமி கும்பிட்டார். அப்போது கோவில் மணி மண்டபத்தில் 16 வாயில்களில் தங்க தகடு பதிக்க ரூ. 6 கோடி வழங்கினார். அதை அறங்காவலர் குழு தலைவர் ஆதிகேசவலு பெற்றுக்கொண்டார். மேலும் 18 கதவுகளுக்கு தங்கம் பதிக்க உதவுமாறு கேட்டுக்கொண்டார். இதை விஜய் மல்லையா ஏற்றுக்கொண்டு மேலும் ரூ.5 கோடி தருவதாக சம்மதித்தார். திருமலையில் இன்று முதல் வசந்த உற்சவம் நடைபெறுகிறது.

இதற்காக கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, பிரமோற்சவம், சகஸ்ரதேவ அலங்கார சேவை ஆகியவைகள் இரத்துச் செய்யப்படுகிறது. வசந்த உற்சவத்துக்கு ரூ.3 ஆயிரம் பணம் செலுத்தினால் 10 பேர் பங்கேற்கலாம். (2-6)

## பாபார் மசூதி இடிப்பு வழக்கு

# அத்வானிக்கு எதிராக ஐ.பி.எஸ் அதிகாரி சாட்சியம் அளித்தார்

(டில்லி)

பாபார் மசூதி இடிப்பு வழக்கில் மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி அஞ்சு குப்தா நீதிமன்றில் அத்வானிக்கு எதிராக் சாட்சியம் அளித்தார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த 1992ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் பாபார் மசூதி இடிக்கப்பட்டது. இது தொடர்பாக பா.ஜ.மூத்த தலைவர் அத்வானி உட்பட பல தலைவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் இது வரை 8 பேர் சாட்சியம் அளித்துள்ள நிலையில் பாபார் மசூதி இடிப்புச் சம்பவத்தின் போது அத்வானியின் மெய்க்காவலராகப் பணியாற்றிய ஐ.பி.எஸ் அதிகாரி அஞ்சுகுப்தா நேற்று ரேபெரெலி நீதிமன்றில் சாட்சியம் அளித்தார்.

அப்போது அவர் பாபார் மசூதி இடிப்புக்கு பா. ஜ.மூத்த தலைவர்களின் தூண்டுதலே காரணம் என கூறியுள்ளார். மசூதி இடிப்புக்கு குறித்த பா.ஜ. மூத்த தலைவர்கள் முன்னரே சதி திட்டம் தீட்டியதாகவும் பூட்டிய அறைக்குள் அத்வானி, ராஜ்நாத் கட்டியார் ஆகியோர் சதி திட்டம் தீட்டியதாகவும் மேலும் கூறினார். (2-6)

# பலவீனமான அண்டை நாடுகள் இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்

(புதுடில்லி)

பலவீனமான மற்றும் செயலிழந்த அண்டை நாடுகளால் இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சசிதரூர் கூறினார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்டை நாடுகள் தீவிரவாத இயக்கங்கள் மீது உறுதியான நடவடிக்கைகள் எடுக்காததால் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டம் வெகுவாக பாதிக்கப்படலாம் என்றும் மாறி வரும் உலகச் சூழலுக்கு ஏற்ப ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புக்களில் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும் என்றும் மேலும் கூறினார்.

# நளினி கருணை மனுவை மத்திய அரசு பரிசீலிக்கும்

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று 19 ஆண்டுகளாக சிறையில் உள்ள நளினி தன்னை விடுதலை செய்யக்கோரிதாக்கல் செய்துள்ள கருணை மனுவை மத்திய அரசு பரிசீலனை செய்யும் என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற அவர் மத்திய அரசுக்கு அனுப்பிய கருணை மனுவின் அடிப்படையில் ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டது. இதையடுத்து கடந்த 19 ஆண்டுகள் வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் 19 ஆண்டுகள் தண்டனை அனுபவித்துவரும் தன்னை கருணை அடிப்படையில் விடுதலை செய்யக்கோரி மத்திய அரசுக்கு மனு தாக்கல் செய்துள்ளார். மேலும் தன்னை விடுதலை செய்ய உத்தரவிடக் கோரி நீதிமன்றிலும் மனு அளித்துள்ளார்.

நளினியின் கருணை மனு குறித்து பெங்களூரில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த மத்திய அமைச்சர் வீரப்பமொய்லி, முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் நளினி தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் கருணை மனு தாக்கல் செய்துள்ளார்.

இதையடுத்து நீதிமன்றத்தின் அறிவுறுத்தல் படி தமிழக அரசு ஆலோசனை அறிக்கையை தயாரித்து மத்திய அரசிடம் தாக்கல் செய்யவுள்ளது. இந்த விவகாரத்தில் தமிழக அரசிடமிருந்து அறிக்கை வந்தவுடன் மத்திய அரசு அதை பரிசீலிக்கும். அவர் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்துவருவதால் விடுதலை செய்யலாமா, வேண்டாமா என்பது குறித்து இப்போது என்னால் எதுவும் கூற முடியாது என்று அமைச்சர் வீரப்பமொய்லி தெரிவித்தார். (2-6)

# ஐ.நா. மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கைக்கு பாதகமான எதுவும் ஆராயப்படவில்லை

(கொழும்பு

ஜெனிவாவில் இம்முறை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் அமர்வுகளில் இலங்கைக்கு பாதகம் ஏற்படும் வகையில் எந்த விடயங்களும் கலந்துரையாடப்படவில்லை. அண்மைக் கால அமர்வுகளுடன் ஒப்பிடுகையில், இது மிகவும் முன்னேற்றமான நிலைமையாகும் என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைப்பேரவை அமர்வுகள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் விசேட அமர்வுகள் கடந்த வாரங்களில் நடைபெற்றன. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி தூதுக்குழு ஒன்று இந்த அமர்வுகளில் கலந்துகொண்டது.


ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் இம்முறை நடைபெற்ற மனித உரிமைப் பேரவையின் விசேட அம்சம் என்னவெனில் இலங்கை தொடர்பில் எந்தவொரு பாதகமான விடயமும் கலந்துரையாடப்படவில்லை.

கடந்த காலங்களில் ஐ.நா.மனித உரிமை பேரவையில் இலங்கை பல சவால்களை எதிர்கொண்டிருந்தமை உங்களுக்குத் தெரியும் கடந்த வருட நடுப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் நடைபெற்ற விசேட அமர்வில் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. அதனை நாங்கள் தோற்கடித்தோம்.

இதேவேளை அதே அமர்வில் நாங்கள் முன்வைத்த பிரேரணை பெருமளவு வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. பல நாடுகள் எமக்கு ஆதரவாக வாக்களித்தன.

ஆனால் இம்முறை அமர்வுகளில் இலங்கை தொடர்பாக பாதகமான முறையில் எந்தவிவகாரமும் கலந்துரையாடப்படவில்லை. இது மிகவும் ஆரோக்கியமான நிலைமை என்பதை தெரிவிக்க வேண்டும். (ஓ-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்
25ஆவது பட்டமளிப்பு விழாவில்
வணிகமாணி B.Com (Hons - Accounting)First Class பட்டம் பெறும்
Mr.F.X. நிரதீப்
அவர்களை பல்கலையும் பெற்று
பற்பல பட்டங்கள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

83/1,கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

வாழ்த்துவோர்:
அண்ணா (சுதர்சன்)
அண்ணி (மதி) மற்றும் குடும்பத்தினர்.

(907)

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த அபயகரம் குமாரசுவாமி புத்தாடைகளைப் பிள்ளைகளுக்கு வழங்கி ஆசீர்வதித்தார். இந்நிகழ்வில் பங்கு பற்றிய பிரதம விருந்தினர், அதிபர், ஆசிரியர்களுடன் மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## கொழும்பு ஆயருடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணி, கொழும்பு பேராயர் பேரருட்திரு மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை நேற்று ஆயர் இல்லத்தில் வைத்து சந்தித்துள்ளது.

இதன்போது ஜெனரல் சரத் பொன்சேகாவை தலைவராக கொண்ட ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் கொழும்பு பேராயர் பேரருட்திரு மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கையளிக்கப்பட்டது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா ஜனநாயக தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை கொழும்பு பேராயரிடம் கையளித்தார்.

நேற்று முற்பகல் இடம் பெற்ற இந்த சந்திப்பின் போது ஜனநாயக தேசிய முன்னணியின் சார்பில் கையளிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசியத்தின் ஒருமைப்பாடு, ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவை குறித்து கொழும்பு பேரா யர் திருப்தி கொண்டுள்ளதாக அனோமா பொன்சேகா குறிப்பிட்டார். (ச-5)

## யூசுப் பதான் சிக்ஸர் மழை; ராஜஸ்தான் வெற்றியில் நனைந்தது

(அகமதாபாத்)

யூசுப்பதானின் அதிரடியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று அகமதாபாத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 22ஆவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 148 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோகித் சர்மா 35 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 49 ஓட்டங்களையும் ஹேர்சல் ஹிப்ஸ் 14 பந்துகளில் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 25 ஓட்டங்களையும் அன்ரூ சைமண்ட்ஸ் 14 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷோன் தைட் 3 விக்கெட்டுக்களையும் நார்வால் 2 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் ஷேன் வோர்ன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 144 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி யூசுப்பதானின் அதிரடியின் மூலம் 15.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 151 ஓட்டங்களைக்குவித்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் யூசுப்பதான் ஆட்டமிழக்காமல் 34 பந்துகளில் (2 பவுண்டரிகள், 8 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 73 ஓட்டங்களையும் லூம்ப் 32 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் பிரஜன் ஓஜா ஒரு விக்கெட்டை வீழத்தினார்.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 6 ஆவது போட்டியில் மூன்றாவது வெற்றியைப் பெற்று 6 புள்ளிகளுடன் உள்ளது.

இதேவேளை டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 6 ஆவது போட்டியில் மூன்றாவது தோல்வியைச் சந்தித்தது.

## இருபது-20 உலகக்கிண்ணம் இந்திய அணி அறிவிப்பு

இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் தோனி அணித் தலைவராகவும் சேவாக் துணைத்தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இருபது-20 உலகக்கிண்ணத் தொடருக்கான 30 பேர் கொண்ட இந்திய உத்தேச அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று 15 பேர் கொண்ட இறுதி அணி மும்பையில் தெரிவு செய்யப்பட்டது.

இதில் தோனி அணித்தலைவராகவும் சேவாக் துணை அணித்தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஹர்பஜன் சிங், ரவீந்திர ஜடேஜா, கௌதம் காம்பீர், சுரேஸ் ரெய்னா, பிரவீன் குமார், சகீர்கான், ஆசீஸ் நெஹரா, தினேஷ் கார்த்திக், ரோகித் சர்மா, யுவராஜ் சிங், யூசுப்பதான் ஆகியோர் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

புதுமுகங்களான வினேய் குமார், பியூஸ் சாவுல்லா ஆகிய இருவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை எதிர்பார்க்கப்பட்ட இஷாந்சர்மா, ஆர்.பி.சிங், பிரஜன் ஓஜா, ஹோலி ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் மேற்கிந்தியத்தீவுகளில் எதிர் வரும் ஏப்ரல் 30ஆம் திகதி முதல் மே 16ஆம் திகதிவரை நடக்கிறது.

இதில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட 12 அணிகள் 4 பிரிவுகளாக லீக் சுற்றில் மோதுகின்றன. இந்திய அணி சி பிரிவில் தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம் பிடித்துள்ளன.

## முதல்வன் மும்பை இந்தியன்ஸ்

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் 22 ஆவது போட்டி வரை மும்பை இந்தியன்ஸ் அணி 8 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் 8 புள்ளிகளைப் பெற்றுள்ள போதும் ஓட்ட விகித காரணி அடிப்படையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. புள்ளிப்பட்டியலில் அணிகளின் விபரம் வருமாறு,

| DLF INDIAN PREMIER LEAGUE அணிகள் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | ஓட்டவிகித சராசரி |
|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 5 | 4 | 1 | 0 | 8 | +1.167 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 6 | 4 | 2 | 0 | 8 | +0.961 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 6 | 3 | 3 | 0 | 6 | -0.017 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 5 | 3 | 2 | 0 | 6 | -0.031 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 6 | 3 | 3 | 0 | 6 | -0.618 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 6 | 2 | 4 | 0 | 4 | -0.079 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 5 | 2 | 3 | 0 | 4 | -0.851 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 5 | 1 | 4 | 0 | 2 | -0.533 |


2010 YEAR STUDY IN UK

Minimum Qualification G.C.E (O/L)

APRIL, MAY SEPTEMBER NOVEMBER

UK சென்று கல்விகற்க விரும்பும் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. யாழ்பாணத்துக்கு முதன்முறையாக லண்டன் கல்வி நிறுவனம் ஒன்று நேரடியாக வருகை தருகின்றது

மாபெரும் இலவச கருத்தரங்கு

- புதிய சட்ட முறையின் மூலம் விசா பெறுவது எப்படி
- CAS நம்பர் முறைமையின் முழு விபரங்கள் வழங்கப்படும்
- UK செல்லும் மாணவர்களுக்கான அனைத்து சந்தேகங்களும் தெளிவுபடுத்தப்படும்

காலம் : 28 - 03 - 2010

இடம் : வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

நேரம் : காலை 10.00 தொடக்கம் மாலை 04.00 வரை

SPOT ADMISSION

பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு : 0771919192 - 0113056888

WIIHS WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES

WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES

(அ-4791)


## 'வடக்கைபார்த்து வாக்கைத்தாருங்கள்' சிங்கள மக்களை அரசு ஏமாற்றுகிறது

## பேரா.சிவசந்திரன் குற்றச்சாட்டு

(வேலணை)

அண்மைக் காலங்களில் யாழ்.நோக்கிப் படையெடுத்துவரும் தென்னிலங்கைக் கிராமிய சுற்றுலாப் பயணிகள் தென்னிலங்கை அரசால் மோசமாக ஏமாற்றப்படும் அப்பாவிகளாகவே உள்ளனர். வன்னியைத் தோற்கடித்து விட்டோம் சென்று பாருங்கள் பார்த்து வந்து வாக்கைத் தாருங்கள் என ஏமாற்றப்பட்டு இன வெறி ஊட்டப்பட்டு பெருந்தொகைப் பணம் கொடுத்து வாகன வசதிகளை ஏற்படுத்தி உள்ளூர் சுற்றுலா என அனுப்பி வைக்கப்படுகின்றார்கள் என தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் பேராசிரியர் இர.சிவசந்திரன் தெரிவித்தார்.

வேலணையில் இடம் பெற்று கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இந்தியாவில் ஒரு காலகட்டத்தில் பௌத்தம் பரவியிருந்தது. தமிழ் நாட்டில் காஞ்சிப் பகுதியில் பௌத்தமதச் சின்னங்கள்காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு பௌத்த மதம் பரவி இருக்கலாம். வழுக்கை ஆற்றுத்துறை முகத்தில் அமைந்திருந்த கந்தரோடையில் தமிழ் பௌத்த துறவிகள் வாழ்ந் திருக்க முடியும். அவர்களின் ஈம அடக்கம் செய்யப்பட்ட பகுதியை பழைய புத்த விகாரையெனவும் சிங்கள புத்தர்கள் இருந்தார்கள் எனவும் கதை கட்டி விடுகின்றார்கள். உண்மையில் இவர்கள் தமிழ் பௌத்தர்களே.

இப்படியாக பொய்யுரை கூறி தமிழ், சிங்கள நல்லுறவை அழித்து இனவாதத்தை வளர்த்து, அரசியல் லாபம் சம்பாதிக்கும் தென்னிலங்கை அரசியல் கோமாளிகள் அப்பாவிக் கிராமிய சிங்கள மக்களை ஏமாற்றி வருகின்றார்கள். இவர்களின் வேடங்கள் விரைவில் கலையும். மகிந்த அரசினதும் அவர்களது குடும்ப சுயலாப நோக்கிலான அரசியல் இனவாத் தீயைப்பரப்பு வதால் இலங்கையை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல் லும் என்பதை சிங்கள மக்கள் விரைவில் புரிந்து கொள்வர். சிங்கள புத்தி ஜீவிகள் இவ் அரசின் இனவாதப் போக்கை ஏற்கனவே நன்கு தெரிந்து கடுமையாக விமர்சித்து வருகின்றனர் என்றார். (எ-5)

## நாடாளுமன்ற உறுப்பினர்களு...

வழங்கப்பட்ட அதேயளவு பாதுகாப்பை வழங்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் தமது உயிர்களுக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகக் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா மற்றும் நீதவான் காமினி அமரதுங்க ஆகியோர் இந்த மனுவை பரிசீலனை செய்தனர். ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும் அதேவேளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகக் குறைந்தளவு பாதுகாப்பும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## புலிகளின்...

வித்துள்ளார். கிளிநொச்சி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது அவர்களின் விமானங்கள் இவ் ஓடுபாதை யைப் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கைதடி...

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிடம் முறையிடப்பட்டுள்ளது. படையினரால் தமது கணவன்மாரும் பிள்ளைகளும் அழைத்துச் செல்லப்படுவதையடுத்துப் பெற்றோரும் மனைவிமாரும் அச்சமடைந்துள்ளனர். (எ-1)

## இராணுவ...

னத்திலிருந்து வாகன இலக்கத் தகடுகள் மீட்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கபில ரத்னாயக்க மீது குற்றஞ்சுமத்தியிருந்தனர். (ச-5)

## தமிழகத்...

தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து அந் நாட்டுக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் குறித்த நபர்களைக் கன்னியாகுமரி கடற்பரப்பில் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானவர்கள் இளைஞர்கள் எனத் தெரிவிக்கப்படுன்றது. (ச-5)


### மரக்கறி வியாபாரிகளின் கவனத்திற்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஏற்றுமதியாகும் வெங்காயம், பீற்றூட், உருளைக்கிழங்கு போன்ற மரக்கறி வகைகளை கொமிசன் அடிப்படையில் நியாயமான விலையில் விற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்பு:-

RUPAR TRADING (PVT) LTD.

ரூபா றேடிங் கம்பனி

116, 4ஆம் குறுக்குத்தெரு,

கொழும்பு-11

(963) T.P.No:- 011 2326719, 011 2447329, 075 0814789


# மாபெரும் வர்த்தகக் கண்காட்சி இன்று கோலாகலமாக ஆரம்பம்

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாபெரும் வர்த்தகக் கண்காட்சி இன்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து மூன்று நாள்கள் வர்த்தகக் கண்காட்சி இடம்பெறும். இதில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண வர்த்தகர்களின் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

இங்கு மலிவான விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து இன்று மாலை 6 மணிக்கு விசேட மேளக் கச்சேரியும் 7 மணிக்குக் காவடி நடனமும் 8 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெறும். (ச-5)

## மீள்குடியமரும் மக்களுக்கான...

ஒதுக்கப்பட்ட நிதி பற்றாக்குறையாகவுள்ளதாலேயே நிதியுதவி நிறுத்தப்பட்டதாகக் கொழும்பில் உள்ள ஐ.நா.சபையின் அகதிகளுக்கான தூதுவராலயப் பேச்சாளர் சொலக்கனி பெரேரா தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

ஒதுக்கப்பட்ட நிதி நிலைமையில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாகவே மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இம் மக்களில் இதுவரை உதவித் தொகை வழங்கப்படாமல் இருந்த குடும்பங்களுக்கு மார்ச் மாதம் இறுதி வரையில் 3மில்லியன் அமெரிக்க டொலர் வரை தேவைப்படுகின்றது.

இந்த நிதியுதவியைப் பெறுவதற்கான முன் முயற்சிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். 2010 ஆம் ஆண்டுக்குள் மொத்தமாக 13 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி மக்களுக்கு வழங்குவதற்குத் தேவைப்படுகின்றது.

எதிர்வரும் மாதங்களில் இந்த நிதியுதவி எமக்குக் கிடைக்காத பட்சத்தில் மீளக்குடியமர்வதற்காக இடைத்தங்கல் முகாம்களில், நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு இந்த நிதியுதவி கிடைக்காமல் போகும் சந்தர்ப்பம் உண்டு.

இதேவேளை ஐ.நாவின் தூதரகத்தினால் வழங்கப்படும் உடுபுடைவைகள், பாய்கள், நுளம்பு வலைகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் காடுகளைச் சுத்தம் செய்வதற்கு வழங்கப்படும் உபகரணங்கள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்றும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-9)


தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

BIT

விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்

Bachelor of Information Technology

University of Colombo

DIT ⇨ HDIT ⇨ BIT

Year 1 Year 2 Year 3

3 Pass A' Levels? → Register for BIT

No Pass A' Levels? → FIT

(சி-4790)

BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும் நேரில்

Closing Date 10.04.2010

25 Students Only

324, Palaly Road, Jaffna.

Call Today-772395895



Foreign Student Admission Officer Available Here

A/L 3 பாடங்களில் சித்தி உள்ளதா???

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் கல்லூரிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகிறார்கள்.

Spot Admission

Free Advice

SONA COLLEGE OF TECHNOLOGY

SALEM,INDIA.

Prof.M.A .MANIKANDAN B.Sc(Hons), MCA, M.Phil, Ph.D

The Director,

International Admissions & Relations,

28th & 29th March @ St.Patrick College

SONA COLLEGE OF TECHNOLOGY

Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India

APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

V4 Educational Consultancy(Pvt)Ltd

"Catalyst for your higher studies"

T.P- 0773867257 0775936343 0217200999

Head Office- #7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06,

Branch- 10, Palaly Road, Jaffna.

Web: http://www.v4edu.com (சி-4786) Email: mail@v4edu.com



பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

யாழ்.மாவட்டம்

★ அசைக்க முடியாத தமிழ்ப் பற்றும் ★ சமச்சீரான சமூக நோக்கமும்

★ எவருக்கும் அடிமைப்படாத மன உறுதியும்

★ அப்பழுக்கற்ற அயராத சேவையும் கொண்ட

ஆ.ந.இராசேந்திரன்

(Dip.in Accg, APFA, AMA, FMAAT.)

(சிரேஷ்ட கணக்காளர், முன்னைநாட் தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபை)

அவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்வோம்.


இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 4

கட்டுவன் புலம் மகாவித்தியாலயம்

(சி-4838)


அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

பாராளுமன்றப் பொது தேர்தல் 2010

கடந்த 30 வருடகால தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை ஒரு நாள் கூட தமிழ் மக்களின் விடுதலைக்காக நேர்மையாக செயற்படவில்லை.

2001 ம் ஆண்டு பாவ மன்னிப்புக் கொடுத்து கூட்டாக அமைக்கப்பட்டதன் பின்னரும் கூட இவர்கள் மனச்சாட்சியுடன் செயற்படவில்லை.

நேர்மையாக செயற்பட்டிருந்தால் இன்று நாம் சந்தித்த மாபெரும் அழிவு தடுக்கப்பட்டிருக்கும். எமக்கு நல்லதொரு தீர்வு நிட்சயம் கிடைத்திருக்கும்.

இவர்களே இன்று உன்னதமான தமிழ்த் தலைவர்களாக எமக்கு சித்தரித்துக் காட்டப்படுகின்றார்கள்

செல்வராசா கஜேந்திரன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

X 12

(சி-4843)

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA

உங்கள் உரிமைக்காக

உழைத்தவருக்கே

உங்கள் வாக்கு....!

X 6

தொழிலதிபர்

ஈ.சரவணபவன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(சி-4840)





பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

அடையாளங்களை ஆக்கிரமிக்கும்

சூழ்ச்சிகளை முறியடித்து

பூர்வீக வாழ்வை தொடர-நம்

உரிமைகளை உறுதிசெய்வோம்!

X


10 X

(சி-4835)

இலங்கைத் தமிழரசுக் கட்சி

சிவஞானம் சிறீதரன்

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரா) அதிபர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.